# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆடி 19 செவ்வாய்க்கிழமை(04-08-1998) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 213



மாநகராட்சி ... யாழ்ப்பாணம்
03 AUG 1998
04 AUG 1998


# மாங்குளத்துக்கு மேற்கில் உக்கிர சண்டை மூண்டது!

## நேற்று அதிகாலை புலிகள் தாக்குதல்

கொழும்பு, ஓகஸ்ட் 4

மாங்குளத்துக்கு மேற்கே, ஸ்ரீலங்காப் பாதுகாப்புப் படைகளின் முன்னரங்கக் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை ஆரம்பித்த திடீர்த் தாக்குதலை அடுத்து, அங்கு கடுஞ் சமர் மூண்டிருக்கின்றது.

இச்சமரில் பாதுகாப்புப் படையினர் தரப்பில் 15 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும்—

விடுதலைப் புலிகள் 37 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் —

அவர்களின் 16 சடலங்களைப் படையினர் கண்டெடுத்துள்ளனர் என்றும் —

ஸ்ரீலங்காப் பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொட்டாஞ்சேனை வீடுகளில் சோதனை

கொழும்பு, ஓக. 4

கொழும்பு கொட்டாஞ்சேனைப்பகுதி வீடுகளில் நேற்று முன்தினமிரவு பொலீஸார் திடீர் சோதனை மேற்கொண்டனர். 4 யுவதிகள் உட்பட 12பேர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிய வந்தது.

(ஐ-21)

## காத்தான்குடியில் தியாகிகள் தினம்

மட்டக்களப்பு காத்தான்குடி முஸ்லிம்கள் நேற்று சுஹதாக்கள் (தியாகிகள்) தினம் அனுஷ்டித்தார்கள்.

1990 ஓகஸ்ட் 3 ஆம் திகதி காத்தான்குடி மீராஜும்மா பள்ளி வாசலில் இடம்பெற்ற சம்பவமொன்றில் பலியான 103 பேர் நினைவாகவே சுஹதாக்கள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. நேற்று அப்பகுதியில் கடைகள், சந்தைகள், தனியார் நிறுவனங்கள் யாவும் மூடப்பட்டு வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. தனியார் வாகன சேவைகள் எதுவும் நடைபெறவில்லை. பள்ளி வாசல்களில் விசேட பிரார்த்தனைகள் நடைபெற்றன.

(ஐ-21)

## 10 தமிழ் இளைஞர்கள் கைது

நீர்கொழும்புப் பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற மின்மாற்றிகள் தகர்ப்புச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 10 தமிழ் இளைஞர்கள் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு முனைத்தீவு வாசிகளான இவர்கள் நீர்கொழும்புப் பகுதியில் ஆபரணத் தொழில்களில் ஈடுபட்டு வந்தனர். (ஐ-21)

## இயக்கச்சியில் ஒருவர் கைது!

தென்மராட்சி, ஓக. 4

இயக்கச்சி வண்ணான்குளம் பகுதியில் வீடு பார்க்கச் சென்ற ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பளை பிரதேச செயலருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கண்டாவளையைச்சேர்ந்த கந்தையா சின்னத்தம்பி என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

(ஐ-117)

## சித்தாண்டியில் 3 படையினர் பலி!

யாழ்ப்பாணம், ஓக. 4

மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டியில் இராணுவ அவதானிப்பு நிலையம் மீது நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர். சிவிலியன்கள் இருவர் காயமடைந்தனர்.

படையினர் திருப்பித் தாக்கியதில் புலி உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் அவரது சடலத்தையும் எல்.எம்.ஜி. ரக துப்பாக்கி ஒன்றையும் படையினர் பின்னர் மீட்டதாகவும் பாதுகாப்புப் படைகளின் தலைமையகம் தெரிவித்தது.

(ஐ)

## கைதாவோர் குறித்த முறைப்பாடுகள் பரிசீலனை

கொழும்பு, ஓக. 4

தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்படுவது குறித்து ஆராயவென நியமிக்கப்பட்ட குழு நேற்று சில முறைப்பாடுகளைப் பரிசீலனை செய்யத் தொடங்கியது.

நேற்றுக் காலை நடைபெற்ற குழுவின் கூட்டத்துக்கு குழுவின் தலைவரான அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி தலைமை வகித்தார். முப்படைத் தளபதிகள், சட்ட மா அதிபர், பொலீஸ் மா அதிபர், நீதி அமைச்சின் செயலாளர் உட்பட பல உயரதிகாரிகளும் பிரசன்னமாகியிருந்தனர்.

குழு உறுப்பினர்களில் அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், எம். பிக்கவானபட்டி வீரக்கோன், ஆர். சம்பந்தன், டக்ளஸ் தேவானந்தா, சுஹைர் ஆகியோரும் கூட்டத்தில் பங்குபற்றினர்.

இக்குழு திங்கட்கிழமை தோறும் கூடவிருப்பது

(10ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தை நிறுத்த கோருகிறார் டக்ளஸ்

கொழும்பு, ஓக. 4

பொதுமக்களை இன்னல்படுத்திவரும் யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அதற்கு மூன்றாம் தரப்பு உதவி கிடைத்தால் அதை வரவேற்போம்.

ஈ. பி. டி. பி. அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புலிகள் மீது விதிக்கப்பட்ட தடை அவர்களுடனான பேச்சுவார்த்தைக்கு தடையாக இருக்காது என்று ஜனாதிபதி வெளியிட்ட கருத்துக் குறித்து பி. பி. ஸிக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இப்படி கூறினார்.

தற்பொழுது நடைபெற்று வருகின்ற யுத்தம் காரணமாக மக்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த யுத்தம் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள புலிகளும் அரசும் பேச்சு நடத்துவதன் மூலமே யுத்தத்தை நிறுத்த முடியும். அந்த வகையில் யாராவது ஒரு தரப்பு அப்படியான ஒரு வாய்ப்பைக் கொடுத்தால் அதை இரு தரப்பினரும் பயன்படுத்திக் கொண்டால் நாம் அதனை வரவேற்போம். அதற்கு அனைத்து ஒத்துழைப்பையும் வழங்குவோம். அதற்கு நாம் தயாராக உள்ளோம்.—என்று அவர் தெரிவித்தார்.

(ஐ-9)

## இந்திய மத்தியஸ்தம்: ஜனாதிபதியின் கருத்தை கூட்டணி பரிசீலிக்கும்

கொழும்பு, ஓக. 4

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா மத்தியஸ்தம் வகிக்கவேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதி நிராகரித்திருப்பது தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைப்பீடம் இன்று கூடி ஆராயவுள்ளது. அதன் பின்னரே ஜனாதிபதியின் நிலைப்பாடு தொடர்பாக கூட்டணியின் கருத்தை தெரிவிக்கமுடியும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவர் வீ. ஆனந்தசங்கரி இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய மத்தியஸ்தத்தை ஜனாதிபதி நிராகரித்திருப்பது தொடர்பாக கூட்டணியின் நிலைப்பாடு குறித்து கருத்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(ஐ-1)

## ஜனாதிபதியின் முடிவை மீள்பரிசீலனை செய்க

### சுரேஷ் பிரமச்சந்திரன்

கொழும்பு, ஓக. 4

இனப்பிரச்சினையை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இன்றித் தீர்க்க முடியாது என்பது யதார்த்தமான உண்மை. எனவே தமிழர் பிரச்சினையில் இந்திய மத்தியஸ்தத்தை ஏற்பதில்லை என்ற முடிவை ஜனாதிபதி மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

ஈ. பி. ஆர். எல். எவ். செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச் சந்திரன் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்தியா மத்தியஸ்தம் வகிக்க

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் பிரச்சினையில் இந்திய ஈடுபாட்டை நிராகரிக்க முடியாது!

### சிவாஜிலிங்கம் கருத்து

கொழும்பு, ஓக. 4

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் ஈடுபாடு என்றைக்கும் உள்ளது. அதை மறுத்துப் புதிதாக எதனையும் கூற இலங்கை அரசுக்கு உரிமை இல்லை.

'ரெலோ' அமைப்பின் முதல்வர் என். கே. சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

இந்தியாவின் மத்தியஸ்தத்தை ஜனாதிபதி நிராகரித்திருப்பது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ் தேசிய இனம் இன்று அரசு மீது முற்றாக நம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் கண்ணி வெடிகளை அகற்றும் ஐ. நா. பணி இடைநிறுத்தம்!

### உபகரணங்கள் எடுத்துவர அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 4

ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தினால் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த கண்ணி வெடிகளை அகற்றும் பணி தற்காலிகமாக இடை நிறுத்தம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெடி பொருள்களைச் செயலிழக்கச் செய்யும் கருவி மற்றும் தொலைத் தொடர்புக் கருவிகளை யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வருவதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்க மறுத்துள்ளதாலே கண்ணிகளை அகற்றும் பணியைத் தாமதப்படுத்த வேண்டிய நிலையேற்பட்டுள்ளதாக ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொலைத் தொடர்பு சாதனம் மற்றும் உபகரணங்கள் பாவிப்பதற்கான அனுமதிக்கு பல தடவைகள் விண்

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## சரவணை
## சின்னமடு மாதா திருவிழா

இன்று 04-08-98 பிற்பகல் 5 மணிக்கு
நற்கருணை விழாவும்
நாளை 05-08-98 காலை 9 மணிக்கு
திருவிழாத் திருப்பலியும்
ஒப்புக்கொடுக்கப்படும்.

★ வாகன வசதிகள் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன.

★ ஆலய வளவினுள் தங்குவதற்குரிய அனுமதி பெறப்பட்டுள்ளது.

சின்னமடு அன்னையின்
ஆசிர்பெற வருவீர்!

-- பங்குத் தந்தை

(சி/4465)

## வாழ்த்துகின்றோம்

பழைய மாணவர்கள் ஆகிய நாம் எமது மதிப்புக்குரிய
யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
முன்னாள் அதிபர்

**அமரர் விசுவலிங்கம் சிவசுப்பிரமணியம்**
அவர்களின் மைந்தன்

**லயன் V. S. சிவரட்ணம்**
அவர்கள்

**அகில இலங்கைச் சமாதான நீதிவானாக**

நீதி அமைச்சினால் இலங்கைத்தீவு முழுவதற்கும் நியமனம் பெற்றதையிட்டு அவரைப்பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

திரு. A. M. திருவாதவூரன்
சட்டத்தரணி, நொத்தாரிசு, சத்தியப் பிரமாண ஆணையாளர், சிரேஷ்ட உதவி நிதியாளர், இலங்கைப் பல்கலைக்கழகம்.

திரு. V. ஆறுமுகம்
முகாமையாளர், இலங்கை வங்கி,
நெல்லியடி.

திரு. A. T. கதிரவேல்
அதிகாரி — தரம் iii வகுப்பு iii,
இலங்கை வங்கி பிராந்திய அலுவலகம்

திரு. S. K. சண்முகநாதன்
கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

திரு. க. வேலும்மயிலும்
இளைப்பாறிய கிராமசேவகர்

A. S. ஆறுமுகமும் சகோதரர்களும்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(58092)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக
இராமநாதன் நுண்கலைத்துறையின்
இறுதியாண்டு மாணவியும், எமது மன்றத்தின்
நிர்வாக உறுப்பினருமான
**மா. கலாயினி**
அவர்களின் அன்புத் தந்தையார்

**சின்னத்தம்பி ஜோ மாணிக்கம்**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

கவின்கலைமன்றம்,
இராமநாதன் நுண்கலைத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
மருதனார்மடம்.

(58098)

## கண்ணீர் அஞ்சலி

எமது யாழ். பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கிராமசேவையாளர் திரு. சி. மகாலிங்கம் அவர்களின் தாயார்

திருமதி
**நேசம்மா சிதம்பரப்பிள்ளை**

அவர்களின் மறைவையிட்டு மனம் கலங்கி நிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்,
ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களும்
நலன்புரிச் சங்கம்,
யாழ். பிரதேச செயலகம்.

(58108)

## மாதாந்த கூட்டம்

யாழ். மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். மாநகர சபையின் இந்து விடுதி அலுவலகத்தில் மேயர் பொ. சிவபாலன் தலைமையில் நடைபெற உள்ளது.

## நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்
அரவிந்தசாமி- ரோஜா
நடித்த
**ரோஜா**
(இனிய பாடல்கள்
நிறைந்தது)
திரைப்படக் கூட்டுத்தாபன (ரீல்ஸ்) படம்.
காட்சிகள்:- 10-30, 2-30
(58101)

## லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
செவ்வாய், புதன்
சிவாஜி - சரோஜாதேவி
எம் ஆர். ராதா நடித்த
**பாகப் பிரிவினை**
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070-212223
(57502)

## ராஜா டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.
இன்றும் நாளையும்
கமல் (இரு வேடம்)
மொனிஷா, சுகன்யா,
கவுண்டமணி, செந்தில்
நடித்த
**இந்தியன்**
06 - 08 - 98 முதல்
சிவாஜி நடித்த
**முதல் மரியாதை**
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/4336)

## ஸ்ரீ செல்வா
சினிமா
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
தினசரி:- 10.30, 2.30
(பழைய நேரம்)
விஜய் - சுவாதி
மன்சூர்அலிகான்,
மணிவண்ணன் நடித்த
**தேவா**
( ஒறிஜினல் பிரதி )
(58105)

## தேவை

தமிழ், ஆங்கில - பெண்
தட்டெழுத்தாளர்
தேவை.
விண்ணப்பிக்கவும்:

இல. 769,
C/o உதயன்,
இல. 361,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(58107)

## மலிவு விற்பனை

புலமைப் பரிசில்
பயிற்சி
வினாத்தாள்கள் - 1998
50 வீத தள்ளுபடி
விலையில்
**BOND**
யாழ். நகர்.
(58110)

## குப்பைக்குள் குண்டு!

யாழ்ப்பாணம், ஓக. 4

வளவினுள் குப்பையைக் கூட்டிக் கொளுத்தியபோது அதனுள் இருந்து வெடித்த இனந்தெரியாத வெடிப் பொருளொன்றின் சிதறலால், குப்பை கொளுத்திய இளம் பெண் காயமடைந்தார்.

நீர்வேலி மத்தியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் விநாயகமூர்த்தி சூரியலதா (வயது 20) என்ற இளம் பெண்ணே காயமடைந்தவராவார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

# மரண அறிவித்தல்கள்

## பொன்னுத்துரை நித்தியானந்தன்
(பிரதம லிகிதர், பிரதேச செயலகம், மானிப்பாய்)

வளாக வீதி, திருநெல்வேலி தெற்கைச் சேர்ந்த பொ. நித்தியானந்தன் 03—08—1998 திங்கட்கிழமை காலை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
இ. இலங்கைநாயகம்
(மைத்துனர்)

(58103)

## ஆண்டி முருகேசு

சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஆ. முருகேசு அவர்கள் இறைபதம் அடைந்துள்ளார். இவர் மு. தங்கம்மாவின் கணவரும் மு. செல்வராசா, [அதிபர், மாதனை மெ. மிஷன் பாடசாலை] மு. பாக்கியநாதன், மு. கமலலோஜினி, மு. புஸ்பராணி விமலராணி, சுசிலாராணி [ஆசிரியர் யா / மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை] ஆகியோரின் தந்தையும் மு. திருநாவுக்கரசு [முருகன் கடைச்சல் பட்டடை], சி. குலசிங்கம், பவளமலர், கமலேந்திரராணி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 4 - 8 - 98 இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்;
மு. பாக்கியநாதன் [சொக்கர்]
[மகன்]
[விநாயகர் கடைச்சல் தொழிற்சாலை, யாழ்ப்பாணம்.]
ஆங்கிலப்பாடசாலை ஒழுங்கை,
சண்டிலிப்பாய்.

[58089]

## சின்னத்தம்பி ஜோ மாணிக்கம்
(B. A சிறப்பு)

31. 7. 98 இல் மறுமைக்குள் பிரவேசித்த பண்டத்தரிப்பை வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி ஜோ மாணிக்கம் அவர்களின் நல்லடக்க ஆராதனை நாளை **05-08-98** புதன்கிழமை காலை 10 மணிக்கு (புதிய நேரம்) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பண்டத்தரிப்பு] தென்னிந்திய திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மேரி இராசாத்தி
(மனைவி)

சந்திரன் இல்லம்,
பண்டத்தரிப்பு.

## திருமதி பரமேஸ்வரி தங்கவேல் (பரமா)
## செல்வி தங்கேஸ்வரி தங்கவேல் (மாலினி)

வல்வெட்டித்துறை தெணியம்பையைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி தங்கவேல் அவர்களும் செல்வி தங்கேஸ்வரி தங்கவேல் அவர்களும் 26-07-98 இல் அகால மரணமடைந்துவிட்டார்கள்.

இவர்கள் தங்கவேலுவின் அன்பு மனைவியும் மகளும், வேம்படி உடையாமணலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கண்ணாடி மார்க்கண்டு நீலாயதாட்சி அம்மா தம்பதியினரின் மகளும் பேர்த்தியும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், சரஸ்வதி ஆகியோரின் மருமகளும் பேர்த்தியும், சந்தானலட்சுமி (61/25, சென்றீற்றாஸ் றோட், கல்கிசை), வரதராஜா (லண்டன்), மகேஸ்வரன் (இந்தியா), சிறிடெவிச் சந்திரன் (இந்தியா) ஆகியோரின் தாயாரும் சகோதரியும், சிவகுமாரனின் (கனடா) பாசமிகு மாமியும் மைத்துனியும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி, இரத்தினேஸ்வரி, புவனேஸ்வரி, யோகேஸ்வரி, பங்கையற்செல்வி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பெறாமகளும், மாணிக்கவேலு (திருச்சி), நடராஜசுந்தரம் (வன்னி) ஆகியோரின் சகோதரியும் மருமகளும், காந்தாமணி, திருவிளங்கம், சந்திரசேகரம், ஐயாத்துரை, கோபால்ராஜ் (குகன்), நடராசா ஆகியோரின் மைத்துனியும் பெறாமகளும் ஆவார்கள்.

இவர்களது பூதவுடல்கள் 1-08-98 சனிக்கிழமை இரவு 8.00 மணிக்கு புங்குடுதீவு மயானத்தில் தகனம் செய்யப்பட்டன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. கோபாலராசா (குகன்)
சிவகுமரன் புடைவை மாளிகை,
பிரதான வீதி,
பருத்தித்துறை.

(58097)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும்

## நவாஸ் ஷெரீப் எச்சரிக்கை

இஸ்லாமாபாத், ஒக. 4
தென் ஆசியாவில் தற்பொழுது இரு அணுவல்லரசுகள் இருக்கின்றன என்பதை மனதில் கொண்டு இந்தியா பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும்.

மேற்கண்டவாறு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.


எல்லையில் மேற்கொண்ட நடவடிக்கை மூலம் இந்தியா தனது பொறுப்பற்ற தன்மையை வெளிக்காட்டி விட்டது என்றும் நவாஸ் ஷெரீப் குற்றஞ்சாட்டினார்.

பேச்சுவார்த்தைக்கான சூழ் நிலைகள் ஏற்படும் போதெல்லாம் இந்தியா இப்படி நடத்து கொள்வது வழக்கம். எந்த ஓர் அரசியல் ராணுவ நிர்ப்பந்தத்துக்கும் பாகிஸ்தான் பணிந்து விட மாட்டாது என்றார் அவர்.

அதே சமயம் காஷ்மீர் எல்லையில் இந்தியப்படைகள் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய மோட்டார், றொக்கட் மற்றும் ஆட்லறி தாக்குதல்களில் 57 பாகிஸ்தானிய குடி மக்கள் கொல்லப்பட்டதாகவும் 75 குடி மக்கள் காயம் அடைந்ததாகவும் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள அஸாத் காஷ்மீரில் உள்ள இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாகிஸ்தான் நடத்திய தாக்குதல்களில் 30 இந்தியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று இந்தியா தெரிவித்துள்ளது.

இந்தியாவும் பாகிஸ்தானும் அணுவெடிப்புப் பரி



சோதனைகளை நடத்திய பின்னர் ஜம்மு காஷ்மீருக்கும் அஸாத் காஷ்மீருக்கும் இடையில் உள்ள கட்டுப்பாட்டு எல்லையில் சமீப நாள்களாக மோதல் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. ஆத்திரமூட்டும் நடவடிக்கையில் ஈடுபடுவதாக இரு தரப்பினரும் பரஸ்பரம் குற்றஞ் சாட்டி வருகின்றனர்.

1947 சுகந்திரத்துற்குப் பின்னர் பாகிஸ்தானும் இந்தியாவும் காஷ்மீருக்காக இரு யுத்தங்களை நடத்தி உள்ளன.

காஷ்மீரில் மூன்றில் இரு பகுதியை (ஜம்முகாஷ்மீர்) தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் இந்தியா, முழு காஷ்மீரும் இந்தியாவுக்கே சொந்தம் என்று தெரிவித்து வருகிறது.

சர்வதேச மேற்பார்வையின் கீழ் காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று பாகிஸ்தான் கோரிவருகிறது.

சர்வஜன வாக்கெடுப்பு

உலக அரங்கில்

மூலம் பாகிஸ்தானுடனா அல்லது இந்தியாவுடனா சேருவது என்று குறித்து காஷ்மீர் மக்கள் முடிவு செய்ய முடியும் என்று பாகிஸ்தான் தெரிவிக்கிறது.

வெளியார் தலையீடு இன்றி சிம்லா ஒப்பந்தத்தின் அடிப்படையில் காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும் என்பது இந்தியாவின் நிலைப்பாடு ஆகும். (இ)

# அமெரிக்க எம்.பி பாக். மீது கண்டனம்

ஜம்மு, ஒக. 4
ஜம்மு காஷ்மீரின் மாவட்டத்தில் சமீபத்தில் இடம் பெற்ற படுகொலைகள் குறித்து அமெரிக்க ஜனநாயகக் கட்சி உறுப்பினர் பிராங் கொலோன் அதிர்ச்சியும் ஆத்திரமும் வெளியிட்டுள்ளார்.

பாகிஸ்தனை பயங்கரவாத நாடுகளின் பட்டியலில் சேர்க்குமாறு அமெரிக்க வெளியுறவு அமைச்சிடம் அவர் மீண்டும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தியா மற்றும் இந்தியாவைச் சேர்ந்த அமெரிக்கர்களுக்கான நாடாளுமன்றக் குழுவின் தலைவரான பிராங் கொலோன் பாகிஸ்தானுடனான இரு தரப்புப் பேச்சுக்களின் போது ஜம்முகாஷ்மீரின் ஒன்றுமறியாத மக்கள் கொல்லப்படுவதான பிரச்சினையை விவாதிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

ஐ. நா. மனித உரிமைகள் ஆணையத்தில் இப்பிரச்சினையை தாம் எழுப்ப இருப்பதாகவும் கொலோன் கூறினார்.

[இ-ரி]

# ஆங்சான் சூகீயின் வீட்டை சுற்றி படையினர்

யங்கூன், ஒக. 4
மியான்மாரின் தலைநகர் யங்கூனில் எதிர்க்கட்சி தலைவர் ஆங்சான் சூகீயின் இல்லத்தைச் சுற்றி அரசு பாதுகாப்பு படைகள் நிறுத்தப் பட்டுள்ளன. அவரது இல்லத்துக்கு போகும் வீதியில் தடை போடப்பட்டுள்ளது.

மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப் படும் வரை ஆங்சான் சூகீக்கு அரசியல் சுதந்திர உரிமை அளிக்க முடியாது என அரசு அறிவித்துள்ளது.

அதேசமயம் சூகீயுடன் பேச்சு நடத்துமாறு மியான்மாரின் இராணுவ அரசைவற்புறுத்த வேண்டும் என்று அமெரிக்காவும், ஆஸ்திரேலியாவும் ஐ. நாவை வற்புறுத்தியுள்ளன.

மியான்மாரின் இராணுவ ஆட்சியாளர்களின் மனித உரிமை மீறல்களை ஐரோப்பிய சங்கம் கண்டித்துள்ளது.

(இ-ரி)

# சுதேச மருந்து வகைகளின் உரிமைக்கு ஆபத்து!

## இந்திய தலைவர் எச்சரிக்கை

புதுடில்லி, ஒக. 4
இந்தியாவின் சுதேச மருந்து வகைகளை மேற்குலக சர்வதேச நிறுவனங்கள் வணிக மயமாக்குவதிலிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இந்தியாவில் குரல் எழுப்பப் பட்டுள்ளது.

சில சர்வதேச நிறுவனங்கள் அறிவுச் சொத்துடைமை தொடர்பான சட்டங்களைப் பயன்படுத்தி மஞ்சள், வேம்பு போன்ற இந்திய மருந்துப் பொருள்களுக்கு உரிமை பெற முயல்கின்றனஎன இந்திய உப ஜனாதிபதி கிருஷ்ண காந்த் தெரிவித்துள்ளார்.

இதனை உடனடியாகக் கவனத்திலெடுத்து பாரம்பரிய முறைகளின் அடிப்படையில் மருந்துகளை உருவாக்கி அந்த தொழில் நுட்பத்தை சரியான முறையில் ஆவணங்களில் பதிவு செய்ய வேண்டும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

(ஐ-6)

# ஜெயின் கமிசன் இறுதி அறிக்கை; காங்கிரஸ் கட்சி ஏற்றது

## ஆனால் நடவடிக்கை அறிக்கைக்கு எதிர்ப்பு

சென்னை, ஒக. 4
ராஜீவ்காந்தியின் கொலைப் பின்னணியிலுள்ள சதித்திட்டங்கள் தொடர்பாக விசாரித்த ஜெயின் கமிஷனின் இறுதி அறிக்கையை காங்கிரஸ் கட்சி ஏற்றுக் கொண்டுள்ளது.

அதேவேளை ஜெயின் கமிஷனின் அறிக்கை மீதான பாரதீய ஜனதா அரசின் நடவடிக்கை அறிக்கையை காங்கிரஸ் கட்சி நிராகரித்து விட்டது.

நடவடிக்கை அறிக்கை அரசியல் நோக்கத்துடன் தயாரிக்கப்பட்டுள்ளதாக காங்கிரஸ் குற்றஞ்சாட்டி உள்ளது.

ஜெயின் கமிஷன் அறிக்கை பற்றி விவாதிக்க கட்சித் தலைவர் சோனியாகாந்தி தலைமையில் நேற்று முன்தினம் காங்கிரஸ் செயற்குழு கூடிய போது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஜெயின் கமிஷனின் இறுதி அறிக்கைகுறித்து பல்துறைக் குழு மேலும் விசாரிக்கும் என்று நடவடிக்கை அறிக்கையில் யோசனை தெரிவிக்கப்பட்டிருப்பது பற்றி காங்கிரஸ் கூட்டத்தில் அதிருப்தி வெளியிடப்பட்டது.

ஜெயின் கமிசன் அறிக்கை மற்றும் நடவடிக்கை அறிக்கை மீதான காங்கிரஸ் கட்சியின் கருத்துக்கள் இந்த அறிக்கைகள் பற்றி நாடாளுமன்றத்தில் விவாதம் நடக்கும் போது தெரிவிக்கப் படும் என்று கட்சித் தலைவர் அர்சுன் சிங் கூறினார்.

அதேசமயம் ஜெயின் கமிஷன் அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக சுயேச்சை அமைப்பு ஒன்றின் மூலம் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை காங்கிரஸ் கட்சி வலியுறுத்தும் என்று கட்சி வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் தெரிவிக்கின்றன.

பாரபட்ச மற்ற விசாரணை நடத்தப்படுவதை உறுதிசெய்ய மத்திய புலனாய்வுப் பிரிவு அல்லது, வேறு ஓர் அமைப்பு விசாரணை நடத்த காங்கிரஸ் [illegible] தெரிய வருகின்றது. கமிஷனால் குறிப்பிடப்பட்ட எல்லா நபர்கள் பற்றியும் விசாரிக்கும் படி காங்கிரஸ் கோரி உள்ளது.

கமிஷன் அறிக்கையில் சர்ச்சைக்குரிய சந்திரா



சுவாமி, ஜனதாக்கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி, தமிழக முதலமைச்சர் கருணாநிதி மற்றும் பலரது பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

(இ-ரி)

# சவூதி மன்னர் சுகயீனம்

றியாத் ஒக. 4
சவூதி அரேபிய மன்னர் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

கோல் பிளாயர் எனும் தொற்று நோய் சிகிச்சைக்காக கடந்த மார்ச் மாதம் இவர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டது தெரிந்ததே.

(இ-ரி)


சுவைப் பிரியர்களே!

ஒரு நற்செய்தி

நல்லூர் ஸ்ரீ கந்தன் உற்சவகால
அடியார்களுக்கென்றே

சுத்தமான நெய்யில் தயாரிக்கப்பட்ட

- திருப்பதிலட்டு
- மைசூர் பாகு
- மஸ்கற்
- தொதல்

தாவர எண்ணெயில் தயாரிக்கப்பட்ட

- மிக்சர்
- கடலை
- பருப்பு
- கச்சான்
- றொட்டி
- கிழங்கு றொட்டி
- மசாலை
- மரக்கறிக் கொத்து

மற்றும் பலகாரங்கள்

சைவ கேக் வகைகள், பணிஸ்வகைகள்
நூற்றுக்கு நூறு தரமாக உணவு வகைகளைப் பெற்றிடவும்

விசேடமாக
செட்டிநாட் ரெஸ்ரோரெண்டில் இருந்தும்
பொம்பே சுவிற்ஸில் இருந்தும்
மௌனறா எயார்மூலம் தருவிக்கப்பட்ட தீன்சுவை பண்டங்களை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

நாடவேண்டிய இடம்:

ஸ்ரீ திருமால் விலாஸ்
இல. 141, = 421, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(இச்சந்தர்ப்பம் உற்சவகாலம் மட்டுமே)

(சி/4461)



உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம்

வடமராட்சி பருத்தித்துறை

நிர்வாக உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம்

தகைமை! அரச. அரசு சார்பற்ற நிறுவனங்களில் நிர்வாக உதவியாளராக 10 வருட அனுபவமும், தமிழ், ஆங்கில மொழித் தேர்ச்சியும் தட்டச்சுச் செய்வதில் சிறப்புத் தேர்ச்சியும், அனுபவமும் உள்ளவர்கள். சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் 15—08—98 ஆம் திகதிக்கு முன்பாக தலைவர், உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம், பிரதான வீதி, பருத்தித்துறை என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

— கௌரவ செயலாளர்

(58091)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

காப்புறுதி வரி ஆவணங்களுடன் சில ஆபரணங்களும் கொக்குவில் சந்தியில் 31-07-98 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து புஸ்பா சலூன் K. K. S வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (58057)

S. சிவபாலன் ஆகிய எனது சிற்றிசன் கைக் கடிகாரம் 01 - 08 - 98 அன்று பலாலியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்தடைந்த பஸ்சிலிருந்து இறங்கும் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள். 77, மானிப்பாய் வீதி, முட்டாஸ் கடைச் சந்தி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (58074)

தவராசா சிவஜா ஆகிய எனது விசேட தேசிய அடையாள அட்டைகள் இரண்டும் (இல. 755542172V) யாழ். நகரப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 6/6, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (58059)

### வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி கச்சாய் வீதி பேரம்பலம் ஒழுங்கையில் சகல வசதிகளையும் கொண்ட வீடு (நான்கு அறைகள், இரண்டு விறாந்தை, சமையலறை உட்பட) உடன் விற்பனைக்கு உண்டு. செல்வநாயகம் வனஜா, C/o நியூ செலக்சன் ரெக்ஸ், 13, நவீன சந்தை உட்புறமாக சாவகச்சேரி. (57979)

### விற்பனைக்குண்டு

புறொயிலர் விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் உடன் தொடர்பு கொண்டு விலை விவரத்தைச் சமர்ப்பிக்கவும். பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். [சி/4445]

6 K. W Lister டீசல் ஜெனரேட்டர் 4 K. V. A, 5 K. W, 1500 R. P. M. டைனமோவும் விற்பனைக்கு உண்டு. மூர்த்தி, சிவன் வீதி, பரவைக்குளம் திருநெல்வேலி. (58076)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பிரதான வீதியில்
சென். ஜோன்ஸ் கல்லூரி, பஸ்தியான் அச்சகம்
ஆகியவற்றுக்கு அருகில்
பரப்பு = 03 குழி-3¾ விஸ்தீரணமுள்ள
காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:
A. D. இராசையா
40, அருணகிரிவீதி, திருகோணமலை.

(சி/4460)

## ஆயுதங்களை மீண்டும் ஒப்படைக்க நடவடிக்கை

மட்டக்களப்பு ''புளொட்'' பணிமனையிலில் இருந்து படையினரால் கடந்தவாரம் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் மீண்டும் ஒப்படைக்கப்படவுள்ளன என படைவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு காரணங்களைக் காட்டி ஆயுதங்கள் கைபற்றப்பட்டது தெரிந்ததே. (இ-10)

## வீதி புனரமைப்பு

அச்சுவேலி பத்தைமேனி பாரதி வீதி, அச்சுவேலி மேற்கு அரசடி வீதி என்பன சுமார் 6 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன. (ஐ-173)

## வாழ்த்துகின்றோம்

திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலயத்தின் அதிபரும், ஈழத்தின் தலைசிறந்த சிற்பக்கலைஞரும், எமது ஆலயத்திற்கு அவரது 100 ஆவது, 101 ஆவது சித்திரத் தேர்களை உருவாக்கித் தந்தவருமான

சிற்பச் சக்கரவர்த்தி
**திரு. ஆறுமுகம் ஜீவரத்தினம்**
அவர்களுக்கு
இந்து கலாசார அமைச்சு வழங்கிய
''கலாபூஷண''

விருதினை இட்டு எமது பாராட்டுகளைத் தெரிவிப்பதோடு கலைஞரும், அவரது குடும்பத்தினரும் சீரும் சிறப்புகளுடன் பல்லாண்டு வாழ்ந்து கலைத் தொண்டு புரிய முருகப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

– திருப்பணிச்சபை

இராமாவில் கந்தசுவாமி கோயில்,
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(58084)

## சார்க் நாடுகளுக்கு பொதுவான வீஸா!

''சார்க்'' அமைப்பில் அங்கம் வகிக்கும் 7 நாடுகளுக்கும் சென்றுவரக் கூடிய பொதுவான வீஸா முறை விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது,

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற ''சார்க்'' அமைப்பு நாடுகளின் உல்லாசப் பயணத்துறை அமைச்சர்களின் மாநாட்டில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

''சார்க்'' நாடுகளின் தலைவர்களும் அந்த நாடுகளைச் சேர்ந்த மூத்த அதிகாரிகளுமே தற்போது இந்தச் சலுகையை அனுபவித்துவருகின்றனர்.

இந்தப் புதிய ''வீஸா'' நடைமுறைக்கு வரும்போது ஒரே வீஸாவில் இந்தியா, பூட்டான், நேபாளம், மாலைதீவு, பங்களதேஷ், பகிஸ்தான் மற்றும் சிறிலங்கா ஆகிய நாடுகளுக்குச் செல்ல முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-10)

மாரீசன்கூடல்
## புனித கயித்தார் ஆலய வருடாந்த திருவிழா

மாரீசன் கூடல் புனித கயித்தார் ஆலய வருடாந்த திருவிழா இவ்வருடம் ஆவணி மாதம் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு திருநாள் கூட்டுப்பலியுடன் நிறைவுறும்.

புனித கயித்தார் பக்தர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பங்குத் தந்தையர்கள்

(58083)

## கண்ணீர் அஞ்சலி

மருதடி J/77 கிராமசேவையாளர்
சி. மகாலிங்கம்
அவர்களது தாயார்
**திருமதி சி. நேசம்மா**

இறைபதம் எய்தியதை ஒட்டி அன்னாருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைத் செலுத்திக்கொள்கின்றோம்.

மருதடி மாதர் கிராம
அபிவிருத்திச் சங்கம்.

(58082)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

(04 - 08 - 1998 செவ்வாய்க்கிழமை)
பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்
**அமரர் இளையதம்பி கதிர்காமநாதன்**
(ஆங்கில நெறி – 2ஆம் வருடம்)

அவர்களுக்கு எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன், அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறும் இந்நாளில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மாணவர் மன்றம்,
பலாலி ஆசிரிய கலாசாலை,
திருநெல்வேலி.

(58086)

## அந்தியேட்டி நினைவு தினம்





| கா. வை. கந்தவனம் (இளைப்பாறிய தபாலதிபர்) | | வை. இ. கதிர்காமநாதன் (ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 2 ஆம் வருட மாணவன் -ஆங்கிலம்) | |
|---|---|---|---|
| தோற்றம் | மறைவு | தோற்றம் | மறைவு |
| 15-11-1915 | 10-07-1998 | 19-12-1954 | 05-07-1998 |

அமரர் கா. வை. கந்தவனத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் 10—08—98 திங்கட்கிழமையும்

அமரர் வை. இ. கதிர்காமநாதனின் அந்தியேட்டிக் கிரியைகள் 04—08—98 செவ்வாய்க்கிழமையும் நடைபெறும்,

அன்றைய தினங்களில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்


யோக வாசா,
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி.

சாமியன் அரசடி,
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி.

(சி/ 4459)

## தமிழ் சங்கத்தினரின் கண்ணீர் அஞ்சலி

சிவதர்ம வள்ளல்
கலாநிதி
உயர்திரு.
**க. கனகராசா**



அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்தகவலையில் கண்ணீர்ப் பூக்கள் சொரிகின்றோம்.

இமயசோதி சுவாமி சிவானந்தரின் அடியொற்றித் தமிழகமெங்கும் ஆன்மீக நெறியை பரப்பிய மகான் அவர்கள்.

பூலோக கற்பகதருவைத் தமது இலச்சினையாகக் கொண்ட தாலநாயகர். பொதுவீதிகள், பாடசாலைகள், பொதுப்பணி மன்றங்களைச் சூழ கனி நிழல் தரும் மரக்கன்றுகளையும், காடுகள், வெளிகள் எங்கும் இலட்சக்கணக்கான பனம் விதைகளையும் நட்டு சோலைகளாக்கியவர். தனியொருவராய் நின்று மிகப்பெரும் சாதனைகளைப் புரிந்த அவருக்கு நிகர் அவரே.

அமரரின் ஆத்மா இறைவன் திருவடி நிழலில் சாந்தியுறப் பிரார்த்திக்கின்றோம்.

வட்டுக்கோட்டைத் தொகுதித்
தமிழ்ச் சங்கம்

(58080)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாநகர சபைக்கு உதவி வழங்க கொழும்பு மாநகர மேயர் விருப்பம்

யாழ்ப்பாணம், ஓக. 4

யாழ். மாநகர சபைக்கு தேவையான கட்டட பொறியியல் அமைப்பு உட்பட மற்றும் சில உதவிகளை வழங்குவதற்கு கொழும்பு மாநகர சபை முன்வந்துள்ளது.

யாழ். மாநகர சபை மேயர் பொன். சிவபாலனையும் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் சிலரையும் தனது அலுவலகத்துக்கு அழைத்த கொழும்பு மாநகர சபை மேயர் கரு ஜயசூரிய இதற்கான உறுதி மொழியை வழங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

நட்பியல் ரீதியாக இடம் பெற்ற இச்சந்திப்பில் யாழ். மாநகர சபை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கும் மற்றும் சில உதவிகளை வழங்குவதற்கும் மேயர் கருஜயசூரியா உறுதியளித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேரில் வந்து யர்ழ். மாநகர சபை நடவடிக்கைகளை பார்வையிடுவதற்கும் மாநகர சபை உத்தியோகத்தவர்கள் மற்றும் மாநகர உறுப்பினர்களைச் சந்தித்து நட்பினை வளர்த்துக் கொள்வதற்கும் தாம் விரும்புவதாகவும் கரு ஜயசூரியா கூறினார்.

இச்சந்திப்பில் கொழும்பு மேயருடன் கொழும்பு மாநகரசபை உறுப்பினர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

யாழ். மாநகர சபை மேயர் இச்சந்திப்பின்போது அரசியல் தீர்வுக்கு எதிர்க்கட்சிகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

யாழ். மாநகர மேயருடன் உறுப்பினர்களான க. சின்னத்துரை, ச. அரவிந்தன், எஸ். கணேந்திரன், த. முகுந்தன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (இ-5)

# சேதமடைந்த வீடுகளை திருத்த கூரைத் தகடுகள்

யாழ்ப்பாணம், ஓக. 4

அண்மைக் காலங்களில் இடம்பெற்ற வன்செயல்களின் போது சேதமடைந்த வீடுகளின் கூரைகளைத் திருத்துவதற்கு யாழ். பிரதேச செயலர் பிரிவில் ''கூரைத்தகடுகள் (சீற்)'' வழங்கப்படவுள்ளன.

மாதாந்தம் ரூபா ஆயிரத்து 500-க்கு உட்பட்ட வருமானம் பெறும் குடும்பங்களுக்கே கூரைத்தகடுகள் வக்ங்கப்படவுள்ளன.

தற்போது ஒவ்வொரு பகுதிக் கிராம சேவகர்களும் தத்தமது பிரிவில் உள்ள சேதமடைந்த வீடுகளின் விவரங்களையும், அவர்களின் வருமான மட்டங்களையும் திரட்டி வருகின்றனர்.

விவரங்கள் சேகரிக்கப்பட்டதும் கூரைத்தகடுகளை வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என யாழ். பிரதேச செயலர் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன. [இ-7]

# ஆலயங்கள் திருத்த நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஓக. 4

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யாழ். பிரதேச செயலர் பிரிவிலுள்ள இரு தேவாலயங்களின் திருத்தவேலைகளுக்காக 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். புனிதயாக்கோபு தேவாலயத்திற்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், சுண்டுக்குளி புனித ஜோன் தேவாலயத்திற்கு 3 இலட்சம் ரூாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (இ-7)

# கிணறுகளுக்கு குளோரின்; முதலாம் கட்டம் பூர்த்தி

யாழ்ப்பாணம், ஓக. 4

உள்ளூராட்சித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் 10 ஆயிரம் கிணறுகளுக்கு குளோரின் போடும் திட்டத்தில் முதலாவது கட்டம் நிறைவு பெற்றுவிட்டதாக திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இரண்டாவது கட்டத்திற்கான ஆரம்பநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வலி. வடக்கு, வலி. மேற்கு, ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு, வலி. கிழக்கு, வலி. தெற்கு ஆகிய ஏழு பிரதேச சபைகளிலும் உள்ள கிணறுகளை இறைத்து குளோரின் போட்டு சுத்திகரிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-5)

# விளையாட்டு உபகரணம்

யாழ்ப்பாணம், ஓக. 4

யாழ். பிரதேச செயலர் பிரிவிலுள்ள மூன்று பாடசாலைகளுக்கு யுனிசெவ் நிறுவனம் விளையாட்டு உபகரணங்களை வழங்கியது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். கன்னியர்மடம் மகா வித்தியாலயம், கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கே பெறுமதிமிக்க விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டதாக யாழ். பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-7)

# வாகன, தொலைபேசி, தளபாடவசதி இன்றி இயங்கும் உள்ளூராட்சித் திணைக்களம்

யாழ்ப்பாணம், ஓக, 4

வாகனம் மற்றும் தொலைபேசி, தளபாடவசதிகள் இல்லாமையால் யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திணைக்கள வேலைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தீவுப்பகுதியிலிருந்து பளை வரையும் 16 உள்ளூராட்சி சபைகளை நிர்வகித்து வரும் உள்ளூராட்சி திணைக்கள ஊழியர்கள் நீண்ட தூரங்களுக்கு சைக்கிளில் சென்றே தமது கடமையைச் செய்ய வேண்டிய நிலையிலுள்ளனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்கள் பலவற்றுக்கும் வாகன வசதிகள் செய்யப்பட்டுள்ள போதிலும் உள்ளூராட்சி திணைக்களத்துக்கு இத்தகைய வசதிகள் இதுவரைக்கும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சமுதாய நலனுக்கு செயலாற்றுதலே சிறந்த கடவுள் வழிபாடாகும்

## சனசமூக நிலையத் சிறப்பு விழாவில் உரை

கொழும்புத்துறை, ஓக 4

ஆண்டவன் வழிபாடு வேறு சமுதாயத் தொண்டு வேறு எனப் பிரிக்க வேண்டாம். சமுதாயத் தொண்டு என்பது ஆண்டவன் வழிபாட்டை ஒட்டி நிற்பது தான்.

தெய்வ நம்பிக்கையில்லாத உள்ளத்தில் மனச்சாட்சி வேலை செய்யாது. நீதி உயிரற்றுப்போகும். பண்பாடு புதைந்து விடும். எனவே வழிபாட்டிற் சிறந்தது சமுதாய நலனைச் சிந்தித்துச் செயலாற்றுதலே.

இவ்வாறு கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய மண்டபத் திறப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து உரையாற்றிய யாழ். மாநகர ஆணையாளர்வே. பொ. பாலசிங்கம் தெரிவித்தார்.

நிலையத் தலைவர் திரு. செ. முத்துக்குமாரசாமி தலைமையில் திறப்பு விழா நடைபெற்றது.

மாநகர ஆணையாளர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

தக்க தின்ன தகாதன இன்னதென றொக்க உன்னலராயின் உயர்ந்துள் மக்களும் விளங்கே'' என்றார் கம்பர். தக்கனவற்றைச் சிந்திப்பவன் எல்லோரும் இன்புற்றிருக்கவே நினைப்பான். கொழும்புத்துறை என்றதும் இங்கு வாழ்ந்து வழிகாட்டிய யோகர் சுவாமியின் சிந்தனையே சித்தத்தில் ஏற்படும்.

இவ்வித புண்ணிய பூமியிலே வாழும் மக்கள் ஒன்றுபட்டு இந்த சனசமூக நிலையத்தை வளர்க்க முன்வர வேண்டும். எதிர்கால சந்ததியினரின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் வகையில் சிறப்பாக பல நல்ல திட்டங்களை இந்த சனசமூக நிலையம் செயற்படுத்துவதை காணும் பொழுது மகிழ்ச்சியடைகின்றேன், என்றார்.

ஓய்வு பெற்ற அதிபர் கா. கணேசதாசன் வரவேற்புரை நிகழ்த்தினார். நிலையத்தின் வரலாறு என்னும் தலைப்பில் திரு பொ. சிவப்பிரகாசம் உரையாற்றினார்.

கட்டடப் புனருத்தாரண வேலைகளைச் சிறப்புடன் செய்த கலைஞர் திருச. சிவலிங்கம் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. நிலையப் பாலர் பாடசாலை, யாழ். கொழும்புத்துறை இ. ம. வி. மாணவர்களாலும் பண்ணை மற்றும் ... பாடசாலை மாணவர்களாலும் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. (அ-30)

# யாழ். பிரதம தபாலகம் செப். 1 இல் புதிய இடத்தில்

யாழ். பிரதம தபாலகம் அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து ஸ்ரான்லி வீதியில் இலங்கை வங்கி 2ஆம் கிளைக்கு அருகில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

கடந்த பல வருடங்களாக பல வசதியீனங்களுச்கு மத்தியில் யாழ். பிரதான வீதியில் தண்ணீர்த் தாங்கிக்கு அருகில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் பிரதம தபாலகம் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. [இ-7]

# சமுர்த்தி உத்தியோகத்தரின் நிலை

வறுமையில் வாடும் மக்களுக்கு உதவும் பொருட்டு உருவாக்கப்பட்டதே சமுர்த்தித் திட்டம். யாழ். மாவட்டத்தில் இது நடைமுறைக்கு வந்தபோது 149 சமுர்த்தி உத்தியோகத்தர்கள் 20-02-98 முதல் நியமனம் செய்யப்பட்டோம். அன்று நாம் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

ஆனால் இன்று வரை எமக்கு நிரத்தர நியமனக் கடிதம் கிடைக்கவில்லை. அதைவிட கடந்த ஆறுமாத காலமாக எமக்குரிய சம்பளப் பணமும் கொடுக்கப்படவில்லை. இது குறித்துப் போராட்டம் ஏதாவது நடத்தலாமா என்று ஆராய்வதற்காக கூட்டமொன்றை ஒழுங்குசெய்த போதும்

வாசகர் திருமுகம்

அதற்கு சில அதிகாரிகள் முட்டுக்கட்டையாகினர்.

எது எப்படியாயினும் ''கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத'' நிலையில் நாம் உள்ளோம். எனினும் இது வரை கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் செயற்பட்டு வருகின்றோம்.

எமது கொடுப்பனவுகள் பற்றி அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டபோது அவர்கள் உரிய பதிலைத் தரவில்லை. வடமராட்சிப்பகுதி சமுர்த்தி உத்தியோகத்தர்களைத் தவிர ஏனைய பகுதியினருக்கு சம்பளம் இதுவரை வழங்கப்படவில்லை. ''ஆறிய கஞ்சி பழங் கஞ்சி'' என்பது போன்றில்லாமல் அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

(பாதிக்கப்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சார்பில் ஐவர் தனித்தனியே எழுதிய திருமுகங்களின் தொகுப்பு இது.)

# பிரதேச செயலகக் கட்டடக் காணி மக்களிடம் பணம் சேகரிப்பது ஏன்?

வலிகாமம் கிழக்கு [கோப்பாய்] பிரதேச செயலகம் ஒரு வாடகைக் கட்டடத்திலேயே கடந்த ஐம்பது ஆண்டுகளாக இயங்கி வந்தது. 1995 ஆம் ஆண்டு செயலகம் சேதமடைந்ததனால் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் தற்காலிகமாக இன்னொரு வீட்டிலேயே இயங்கி வருகின்றது.

அரசாங்கம் ஐம்பது இலட்சம் ரூபாவை வலிகாமம் கிழக்குப்பிரதேச செயலகக் கட்டடம் அமைக்க இவ்வாண்டு ஒதுக்கியிருக்கின்றது. ஆனால் காணியை மக்களிடமிருந்து நன்கொடையாகவோ அல்லது அரச காணி பொருத்தமாக இருப்பின் அதிலோ கட்டடத்தை அமைக்க ஆலோசனை அளித்துள்ளது. எனவே அரச காணி இல்லாதவிடத்து மக்களின் பங்களிப்புத் தேவை என்பதை எவரும் ஏற்பர்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் புதிய கட்டடம் தொடர்பாக விடா முயற்சிசெய்து பொருத்தமான அதே பழைய இடத்தில் கட்டத்தை அமைக்க மிகவும் குறைந்த விலையில் காணியை வாங்க நடவடிக்கை எடுத்தார். நன்கொடையாகப் பெறுவது சாத்தியப்படவில்லை. ஒதுக்கப்பட்ட ஐம்பது இலட்ச ரூபாவையும் கட்டடத்திற்கு செலவு செய்து முடிக்காதுவிடின் அதைத் திரும்பப் பெறுவதில் சிரமமும், தாமதமும் ஏற்படும். என்று எண்ணி, ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள சனசமூகநிலையம் மற்றும் தாபனங்களின் தலைவர்கள், பிரதிநிதிகளை அழைத்து தனது நிலைப்பாட்டையும், கஷ்டத்தையும் விளக்கினார். எவ்விதமும். ஒதுக்கிய பணத்தை எமது பிரதேசத்திற்கு பாவிக்க வேண்டும் என்றே சகலரும் விரும்பினர். எனவேதான் மிகவும் குறைந்த விலையில் ஏற்பாடு செய்த காணியை வாங்க மக்கள் தங்கள் சுயவிருப்பத்தின் பேரில் இயன்றளவு பணஉதவி செய்ய முன்வந்தனர். இதை தங்கள் நம்பிக்கைக்கு உரியவரான கிராம சேவகர் மூலம் கொடுத்து உதவவும் சம்மதித்தனர். சிரமங்களைப் பாராது சனசமூக நிலைய உறுப்பினர்கள் மற்றும் நலன் விரும்பிகள் மக்களைச் சந்தித்து பணிவுடன் கேட்டதற்கிணங்க பலரும் சந்தோசமாக பணம் உதவினர். வசதி குறைந்தவரிடம் பணம் கேட்கவில்லை.

பிரதேச செயலரைப் பொறுத்தமட்டில் தான் வலிகாமம் கிழக்கு பிரஜையல்ல. எனினும் இப்பிரதேசத்தில் கொண்ட அன்பும், மக்களின் மதிப்பும காரணமாகவே செயலக கட்டடம் தொடர்பாகபெருமுயற்சி எடுத்தேன். மிகுதி உங்கள் விருப்பம் என்று முடித்து விட்டார். இதிலிருந்து எவரும் உணரக்கூடியது வலிகாமம் கிழக்கு பிரதேச சபை செயலக கட்டடத்தின் அவசியமும் அவசரமுமாகும்.

அரசாங்கத் தேவைக்கு காணி — பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பெற்றோர் ஆசிரியர் சங்கம், பழைய மாணவர் சங்கம் பாடசாலைகளை எவ்விதம் அபிவிருத்தி செய்தன. முன்பெல்லாம் அரசாங்கம் பாடசாலை ஆசிரியர் சம்பளத்தை மாத்திரமே கொடுத்து உதவியது மிகுதி கட்டடம், உபகரணங்கள் போன்றவற்றை மாணவரிடமும், மக்களிடமும் பெற்றுத்தான் அபிவிருத்தி செய்யப்பட்டன.

இதைவிட பொதுமக்கள் வைத்தியசாலைக்கட்டடம் அமைத்துக்கொடுக்க அரசாங்கம் அதைப் பின்னர் நடத்திய சந்தர்ப்பங்கள் உண்டு.

மேலும் தனிநபர் நிர்வாகத்தில் உள்ள கோவில்கள் பலவும் வளர்ச்சி கண்டது எவ்வாறு? ஊரவர்களின் நன்கொடைகளால் அல்லவா?

எப்படி வந்தது?

மக்கள் பல வழிகளிலும் நொந்துபோய் இருப்பதும் உண்மை. ஆனால் 1996 ஆம் ஆண்டின் பின் எத்தனை அசாதாரணமான பாராட்டு வைபவங்கள், விளம்பரங்கள், விழாக்கள் எல்லாம் மக்கள் பணத்தில் தானே. இவற்றில் எத்தனை ஆற்றோடு போனவை. ஆனால் வலி. கிழக்குப் பிரதேசசபை புதிய செயலகம் பன்நெடுங்காலம் சேவை செய்யப் போகின்றது என்பதை வாசகர் தேவரத்தினம் மறந்துவிட்டார்.

கள்ளியங்காடு, கனக. நடராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்க் மாநாட்டில் தாம்நடத்தப்பட்ட விதம்குறித்து அமைச்சர்கள் அதிருப்தி

## ஜனாதிபதியிடம் முறையிட முடிவு

கொழும்பு, ஓக. 4

இலங்கையில் சார்க் மாநாடு நடைபெற்றபோது இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பாக இரு அமைச்சர்கள் ஜனாதிபதிக்கு முறைப்பாடு செய்ய உள்ளனர்.

கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சட் பத்திரன, திட்ட அமுலாக்கல் அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோப் புள்ளே ஆகியோரே இந்த இரு அமைச்சர்களும் ஆவர்.

சார்க் மாநாட்டின் போது அமைச்சர்கள் சிலருக்கு விடுக்கப்பட்ட அழைப்புக்கள் தொடர்பாகவும், வரவேற்பின் போது அவர்கள் நடத்தப்பட்ட முறை தொடர்பாகவுமே இந்த இரு அமைச்சர்களும் முறைப்பாடு செய்ய உள்ளனர்.

சார்க் மாநாட்டின் இறுதியில் நடைபெற்ற இராப்போசனத்துக்கு சில அமைச்சர்கள் அழைக்கப்படவில்லை என்றும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமது முறைப்பாடுகளை அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப் போவதாகவும் இவர்கள் தெரிவித்தனர். (இ-9-10)

## பயிற்சி முடிந்த 30 தாதியர்

யாழ்ப்பாணம் ஓக. 4

யாழ். தாதியர் பயிற்சிப் பாடசாலையில் மூன்றுவருட காலப் பயிற்சியைப் பூர்த்தி செய்த 30 தாதியர்கள் பயிற்சி நெறியை முடித்துக்கொண்டு வெளியேறியுள்ளனர்.

இவர்களுக்கான இறுதி ஆண்டுப் பரீட்சைகள் அடுத்த வாரமளவில் தாதியர் பயிற்சிப் பாடசாலையில் இடம் பெறவுள்ளன.

இந்த மூன்று வருட காலப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டகாலத்தில் 60 தாதியப் பயிற்சி மாணவர்கள் பயிற்சியில் கலந்து கொண்டனர் எனவும்—

பின்னர் 30 பேர் வேறு தொழில் வாய்ப்புக்களைப் பெற்று வெளியேறி விட்டனர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-139-7)

## ஏழாலையில் திருட்டு!

யாழ்ப்பாணம், ஓக. 4

வீட்டில் தனிமையில் இருந்த குடும்பப் பெண் ஒருவரை மிரட்டிய திருடர்கள் அவரை ரோர்ச் லைற்றினால் தாக்கிவிட்டு அவரிடம் இருந்த பெறுமதி மிக்க நகைகளைக் கொள்ளைஅடித்தனர்.

இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு ஏழாலை மேற்கில் இடம்பெற்றது.

இரவு வேளை கூரை ஓட்டைப் பிரித்து வீட்டினுள் நுழைந்த திருடர்கள் தனிமையில் இருந்த பெண்ணை மிரட்டியதுடன் அவரிடம் இருந்து காப்பு, மோதிரம் உட்பட பெறுமதியான நகைகளை அபகரித்தனர்.

தாம் வைத்திருந்த ரோச் லைற்றினால் குறிப்பிட்ட பெண்ணின் தலையில் தாக்கிவிட்டு அவர்கள் மறைந்து விட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த பெப்ரவரி மாத முற்பகுதியிலும் சம்பந்தப்பட்ட வீட்டில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-9)


உ

### ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்

கொக்குவில்

### கணக்காய்வு

மேற்படி ஆலயத்தின் 1997/98 ஆம் நிதி ஆண்டின் (01 - 08 - 97 தொடக்கம் 31-7-98 வரையான) வரவு செலவுக் கணக்கினை பரிசோதனை செய்ய, கணக்காய்வு நிறுவனங்களிடமிருந்து 08 - 08 - 98 வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விவரங்களுக்கு ஆலயப் பொருளாளருடன் தொடர்பு கொள்ளவும்.

- செயலாளர்

கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில். (58070)



### வாழ்த்துகின்றேன்:

எமது இலங்கை வங்கி திருகோணமலைக் கிளையின்
உதவி முகாமையாளர்

திரு. சிவஞானசுந்தரத்தின்

சகோதரரும், எமது வாடிக்கையாளரும், எமது
வங்கியின் காணி மதிப்பீட்டாளர்களில் ஒருவருமான

**திரு. வி. எஸ். சிவரத்தினம்**

அவர்கள் அகில இலங்கைச் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளதை அறிந்து மகிழ்வோடு அவரை வாழ்த்துகின்றேன்.

க. பாலசுப்பிரமணியம்
பிராந்திய முகாமையாளர்

பிராந்திய அலுவலகம்,
இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம். (58006)


## நாளை அவசர கால சட்ட நீடிப்பு விவாதம்

மட்டக்களப்பு, ஓக. 4

அவசரகால சட்டத்தை நீடிப்பதற்கான நாடாளுமன்ற விவாதம் நாளை இடம்பெறுமெனத் தெரிய வருகிறது.

வழமையாக ஒவ்வொரு மாதமும் 6 ஆம் திகதியே அவசரகால சட்டத்தை நீடிப்பது தொடர்பான பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவது வழமை ஆகும். (இ-21-7)

## சந்தைக் கட்டட வேலை ஆரம்பம்

வலி. தென் மேற்கு பிரதேச சபை பண்டத்தரிப்பு உப அலுவலக சந்தை கட்டட வேலைக்கான ஒப்பந்த கேள்விகள் கோரப்பட்டு ஒப்பந்தகாரர்கள் தெரிவுசெய்யப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஐ. நா. அபிவிருத்திதிட்ட நிறுவனத்தின் உதவியுடன் இக்கட்டடம் அமைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## விண்ணப்பம் கோரப்படுகிறது

வலி. தென்மேற்கு, ஓக. 4

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகம் உதவி விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பங்களை கோரியுள்ளது.

வர்த்தகம், பொருளியல், முகாமைத்துவம் போன்றவற்றில் வகுப்பு இரண்டு தரத்தில் சித்தியடைந்தவர் இதற்கு விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான இறுதித் திகதி இம்மாதம் 31 ஆம் திகதியாகும். விண்ணப்பப் படிவங்களை சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடமிருந்து பெற்று விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ-185-9)

## இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், ஓக. 4

கப்பலில் இருந்து பாஜ்ஜுக்கு பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த வேளை கப்பல் பாரம்தூக்கி ஊக்கு அடித்து தொழிலாளி ஒருவர் காயமடைந்தார்.

காங்கேசன் துறைமுகத்தில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கப்பல் தொழிலாளியான காரைநகரைச் சேர்ந்த [illegible] (வயது 18) என்பவரே காயமடைந்தவராவார். (இ-15-9)


சங்கானை
தென்னிந்தியத் திருச்சபையினர் சொரியும்

### கண்ணீர்ப் பூக்கள்

13 வருட காலம் எமது திருச்சபையில்
இறை சேவை புரிந்தவரும், இப்போது கர்த்தருக்குள்
நித்திரை அடைந்து விட்டவருமான

**சகோ. எஸ். ஜே. மாணிக்கம்**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துவதுடன் குடும்பத்தவரின் துயரிலும் பங்கு கொள்கின்றோம்.

– சங்கானை சபையினர்

தென்னிந்தியத்திருச்சபை,
சங்கானை. (58071)



### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 14 — 10 — 1922

உதிர்வு 04 — 08 — 1997

**திருமதி அருளம்மா யோசேப்**

''இறந்தோரிடமிருந்து கிறிஸ்து உயிர்த்தார்
அஞ்சினோரின் முதற்கனி அவரே''
(1 கொரி. 15: 20- 21)

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திப்போமாக

இவரின் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள், சகோதரர்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

பலாலி வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (58051)



J. M. J.

### விண்ணுலகில் நான்கு ஆண்டு



**சவரிமுத்து ஸ்ரெடிசியன்**

தாய்கரம் 01 - 07 - 1975

இறை கரம் 04 - 08 - 1994

வளர்ந்தது இரு மரமாய்
இணைந்தது ஒரு மரமாய்
மலர்ந்தது ஏழு கிளையாய்
முறிந்தது ஒரு கிளையாய் – உனை
பிரிந்தது அறு கிளையுமாய்
கடிந்தது இரு மரமுமாய்
நான்கு ஆண்டு முடிந்தும் - உனை
மறக்குமா உயிர் ஊட்டிய
இந்த ஆல மரம்.

உமது ஆத்மா சாந்தி அடைய புனித சவேரியாரின் பாதங்களில் எமது கண்ணீர்ப்பூக்கள்.

அப்பா, அம்மா, அக்கா,
அண்ணாமார், அத்தான். அண்ணிமார்,
மக்கள், மருமக்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

குளமங்கால்,
மல்லாகம். (58075)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தெளிவான சமிக்ஞை

இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியா மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என்று கொழும்பு வந்திருந்த இந்தியப் பிரதமர் வாஜ்பாயிடம் தமிழ்க் கட்சிகள் கேட்டிருந்தன.

அவை அவ்வாறு கேட்டது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்குக் கோபத்தை மூட்டியுள்ளது. இது தொடர்பாகத் தமிழ்க் கட்சிகள் தெரிவித்த கருத்துக்களைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறி அந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ளார் அவர். அதாவது இந்திய மத்தியஸ்தத்தை ஏற்க முடியாது என்று அறிவித்திருக்கிறார்.

இத்தனைக்கும், தமிழ்க் கட்சிகளின் கோரிக்கை குறித்து இந்தியப் பிரதமர் எவ்வித கருத்தும் வெளியிடவில்லை. அவ்வாறிருக்கையில் சந்திரிகா முந்திக்கொண்டு நிராகரித்திருக்கிறார்.

இனப்பிரச்சினை விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்வதற்கு இந்தியா உடனடியாக - இலகுவில் - உடன்படமாட்டாது என்பதே பரவலான கருத்தாக இருக்கிறது. அப்படியிருக்க இலங்கை ஜனாதிபதி மத்தியஸ்தத்தை நிராகரிப்பதாக அவசரஅவசரமாக அறிவித்திருப்பதன் பின்னால் பல காரணங்கள் உண்டு என்று ஊகிக்கலாம். இந்திய மத்தியஸ்தம் என்பது ஜனாதிபதிக்கு அச்சத்தை, பதற்றத்தை உண்டாக்கியிருக்கிறது.

இந்திய மத்தியஸ்தத்தை நிராகரிப்பதாக முந்திக்கொண்டு அறிவிப்பதால்—

★ தன்னிடம் வைக்கப்பட்ட கோரிக்கையை ஏறெடுத்தும் பார்க்காமல் இந்தியாவை தடுத்து விடுவது.

★ வேறு எந்த நாடுமே மத்தியஸ்தம் குறித்துச் சிந்திக்காமல் தடுத்து விடுவது.

★ இனப்பிரச்சினையை உள்நாட்டு விவகாரம் என்று சொல்லி, தமக்குள்ளேயே முடக்கி, தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றாத ஓர் அரைவேக்காட்டுத் தீர்வை திணிக்க வசதியான சூழலை உருவாக்குவது.

★ இனப் பிரச்சினைக்கு உள்நாட்டிலேயே அரசியல் தீர்வு ஒன்றை காண்பதாகக் கூறிக் கொண்டு பதவிக்காலம்வரை கடத்துவது.

என்பனவே அந்தக் காரணங்கள்.

சந்திரிகாவின் இந்த அறிவிப்பின் — நிராகரிப்பின்—பின்னரும் தமிழ்க் கட்சியினர் அவரின்சேலையைப் பிடித்துக் தொங்கிக் கொண்டிருந்து எதனையுமே எய்த முடியாது!

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கமும் தமிழ்க் கட்சிகளும் பேசி அல்லது கருத்துப் பரிமாறி எதனையுமே பெற முடியாது என்பதற்கான மிகத் தெளிவான சமிக்ஞை இது.

தமிழ்க் கட்சிகளுக்கு இப்போதுள்ள ஒரே ஒரு மார்க்கம் அரசுக்கு வழங்கும் ஆதரவை நிறுத்திக்கொள்வது தான்! வேறு எந்த நியாயமும் கற்பிக்க முனையாமல் ஆதரவை வாபஸ் பெறுவது தான் தமது ஆதரவுக்கு கைம்மாறாக அரசு எதனையுமே செய்யமாட்டாது என்பதனை இப்போதாவது உணர்ந்து கொள்ளட்டும்.

# யாழ்ப்பாணத்தின் கைத்தொழில் வளர்ச்சிக்கு உதவக்கூடிய உயிர் தொழில் நுட்பு நிலையம்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் அண்மையில் உயிர் தொழில் நுட்பு நிலையம் திறந்து வைக்கப்பட்டது. மேற்படி நிலையத்தினால் பெறக்கூடிய பயன்களையும் அது திறக்கப்பட்டதன் நோக்கத்தையும் இக்கட்டுரை விவரிக்கின்றது.

**பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியம்**
(யாழ். பல்கலைக்கழகம்)

காலங்காலமாக அபிவிருத்தியானது மக்களின் தேவைகளை இலகுவில் பூர்த்தி செய்யக் கூடிய இடங்களை மையமாகக் கொண்டே நிகழ்ந்துள்ளது. இன்றும், அன்றும் நாகரிக வளர்ச்சி, குடிதண்ணீர் இலகுவாகக் கிடைக்கக் கூடிய இடங்களைச் சார்ந்தும், சூழ்ந்துமே ஏற்பட்டுள்ளது. வர்த்தக மையங்கள் கடல், தரை வழி மூலமும், தற்போது வான் மூலமும், இலகுவில் அடையக்கூடிய இடங்களிலேயே ஸ்தாபிக்கப்பட்டன. ஆயினும் உயிர் தொழில் நுட்பவியல் மையத்தின் அமைவிடத்தை அறிவாற்றலே நிர்ணயிக்கின்றது. விஞ்ஞானப் பேட்டைகளும், (Science Parks), பல சிறப்புத் தேர்ச்சி மையங்களும், கல்விச் செறிவு உயர்ந்து விளங்கும் பல்கலைக்கழகங்களிலும், அவற்றைச் சூழவுமே அமைக்கப்பட்டுள்ளன.

1986 ஆம் ஆண்டு நவம்பரில் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட உயிர் தொழில் நுட்பவியலானது பாரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது. சுவீடன் நாட்டின் லுண்ட் (Lund) பல்கலைக் கழகத்தின் உயிர் தொழில் நுட்பவியல் பிரிவின் பேராசிரியர் மற்றியாசனதும் அவரது சக கல்விசார் ஊழியரினதும் உதவியுடனேயே யாழ். பல்கலைக்கழகத்தில் இக்கற்கை நெறிகளும், ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு சுவீடன் நாட்டின் உப்சலா பல்கலைக்கழகத்தின் ஐ. பி. ஐ. சி. எஸ். நிறுவனமும் உதவி வழங்கியது. லுண்ட் பல்கலைக்கழகத்திற்கும் யாழ். பல்கலைக்கழகத்திற்கும் இடையிலான கல்விசார் ஊழியர்களதும், மாணவர்களதும் பரிமாற்றம், அபிவிருத்தி அடைந்த நாட்டில் இருந்து அபிவிருத்தி அடைந்துவரும் நாட்டிற்கு புதிய தொழில் நுட்பவியலைக் கொண்டு வருவதற்கு உதவியது.

தூர நோக்கத்துடன் இம்மையத்தை நிறுவ உதவிய துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும், பேரவையினரும் பாராட்டுக்குரியவர்கள். இம்மையம் வைபவரீதியாக இவ்வருடம் ஜூன் மாதம் 28ஆந் திகதி மருத்துவபீடத்தில் திறந்து வைக்கப்பட்டது. உயிர்த் தொழில் நுட்பவியலிற்கான மையத்தை அபிவிருத்தி செய்வதற்கு போதுமான அளவு பொருளாதார வளங்களும், உட்கட்டுமானமும் உள்ளதா எனும் வினா தற்பொழுது எழுகிறது. எனினும் பிரதேச வளங்களைப் பயன்படுத்தவும், உச்ச தொழில் நுட்பங்களைத் தெரிவு செய்யவும் இவ்வாறான இடர்பாடுகளை எதிர்கொள்ளவும், இப்படியான ஒரு மையம் இருத்தலின் அவசியமும், முக்கியத்துவமும் புலனாகிறது.

யாழ். பல்கலைக்கழகத்தில் உயிர் தொழிநுட்பவியலில் பெற்ற அநுபவத்தையும், அறிவையும் சிறிது சிறிதாக அபிவிருத்தி அடையச் செய்யவும் அவற்றின் தொடர்ச்சியை உறுதிப்படுத்தவும் இம் மையம் உயிர் நாடியாக அமைகிறது. இந் நிறுவனம் மேலும் பல்கலைக் கழகங்களினதும் தரவுத் தளங்களினதும் மற்றும் வேறு சர்வதேச நிறுவனங்களினதும் உயிர்த் தொழிநுட்பவியல் சம்பந்தமான அறிவை இலங்கையில் மட்டுமல்லாமல் ஏனைய எல்லா நாடுகளிலும் உள்ள தொழில் நுட்ப வல்லுநர்களும் விஞ்ஞானிகளும் இலகுவாகப் பெறுவதை உறுதிப்படுத்துகிறது.

### நோக்கம்

இம்மையத்தால் உயிர்த் தொழில் நுட்பவியல் (Bio Technology) சம்பந்தமான அறிவை இலங்கையிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் வினைத் திறனுடன் பரப்ப முடியும். இது யாழ். பல்கலைக்கழகத்தை மையமாகக்கொண்டு உயிர்த் தொழில்நுட்பவியலுடன் தொடர்பான தேசிய மற்றும் பிரதேச நிறுவனங்களை ஒன்றிணைத்து ஒரு வலையமைப்பை உருவாக்குவதன் மூலம் நிறைவேற்றப்படலாம். இவ்வலையமைப்பு உயிர்த்தொழில் நுட்பவியல் சம்பந்தமான தகவலை தேசிய, சர்வதேச நிறுவனங்களிடையே பரிமாறுவதற்கு உதவும். இம்மையம் தனக்குச் சொந்தமான தகவல் தளங்களைக் கொண்ட கணனிகளைக் கொண்டிருக்கும் என்பதால், உலகம் முழுவதிலும் உள்ள ஏனைய தகவல் தளங்களுடன் இன்ரர்நெற், ஈ மெயில், பாக்ஸ் மூலம் தொடர்பு கொள்ளலாம். இத்துறையுடன் தொடர்பான நூல்களையும், சஞ்சிகைகளையும் விரைவாக நூலகம் பெறக்கூடிய வகையில், இம்மையம் மேலும் திட்டங்களை வகுக்கும்.

தற்போதுஅறிவின் அளவு ஒவ்வொரு 5 வருடத்திலும் இருமடங்காகிறது. இதன் விளைவாக புதிய தொழில் நுட்பத்தின் பிரயோக காலம் விரைவாகக் குறைந்து வருகிறது. நவீன யுகத்தின் பிரதான குணாம்சமாக வளர்ந்துவரும் செறிந்த அறிவுத்திறன் இருக்கிறது. தகவல் தொழில் நுட்பத்தின் முன்னேற்றமானது செறிந்த தொழில் நுட்ப அறிவின் வளர்ச்சிக்கு உதவுகிறது. நவீன தகவல் தொழில் நுட்பங்களை உள்ளடக்கிய உயிர் தொழில் நுட்பவியல் மையம் உலகின் ஒவ்வொரு மூலையிலும் உள்ள எந்த விஞ்ஞானியையும் எந்நேரத்திலும் தொடர்பு கொள்ள உதவும். இது எமது விஞ்ஞானிகளுக்கு உலகின் கல்விச் சமுகத்துடன் பரிச்சயம் ஏற்பட உதவுவதுடன், அதே சமயம் தேசிய, பிரதேச வளர்ச்சிக்கும்உதவமுடியும். தொழிற்சாலைகளுக்குத் தேவையான உயிர் தொழில்நுட்பவியலுக்கு அத்தியாவசியமான மனித வலுவை உருவாக்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் தற்போது முது விஞ்ஞானமாணி (உயிர்த்தொழில் நுட்பவியல்) கலாநிதி (உயிர் இரசாயனவியல்) போன்ற கற்கை நெறிகளை யாழ். பல்கலைக்கழகத்தின் உயிர் இரசாயனவியல் பிரிவால் வழங்குவதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. தகுந்த நிபுணத்துவம் மிக்க பல்கலைக் கழகங்களுக்கிடையிலும், எம் பல்கலைக்கழகத்திலேயே பல்வேறு துறைகளிற்கிடையேயும் கூட்டு ஆராய்ச்சியினை இவ்வுயிர்த் தொழில்நுட்ப மையத்தில் மேற்கொள்ள முடியும். உயிர்த் தொழில்நுட்டவியலானது பல்துறைகளையும் உள்ளடக்கியதாக இருப்பதால், அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவை குறித்த ஒரு துறையை மாத்திரம் உள்ளடக்கும் உயிர் இரசாயனவியல், நுண்ணுயிரியல், இரசாயனப் பொறியியல் போன்ற பிரிவுகளின் கூட்டுச் செயற்பாட்டினால் பெறுவது கடினம்.

### விஸ்தரிப்பு அவசியம்

எனவேஇவ்வுயிர்த் தொழில் நுட்பமையமானது இவ்வெல்லாத் துறைகளையும் ஒரே கூரையின் கீழ் கொண்ட பாரிய ஓர் அமைப்பாக விஸ்தரிக்கப்படுவது அவசியமாகும். இத்தகைய விஸ்தரிப்பு உயிர்த் தொழில் நுட்பவியல் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதுடன் தற்போதைய அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்கும் சாத்தியத்தையும் கொண்டிருக்கும்- மேலும், இது உயிர்த்தொழில் நுட்பவியலின் பங்களிப்பை அதிகரிப்பதற்கும், தொழில் நுட்பவியல் மாற்றத்திற்கும் வழிகோலும்.

உயிர்த்தொழில் நுட்பவியல் மையம் விஞ்ஞானப் பேட்டையின் கருவாக அமையும்போது பல்வேறு துறைகளைச் சேர்ந்த விஞ்ஞானிகளும், தொழில் நுட்ப வல்லுநர்களும் ஒன்று சேர்ந்து செயற்படுவதற்கும், அறிவாற்றலை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகள் அனைத்தும் ஒருங்கிணைவதற்கும் இவ்வுயிர்த் தொழில்நுட்பவியல் மையம் அத்திவாரமாக அமையும்.

நிபுணத்துவம் மேற்கொள்ளப்படும் பகுதியினளவு மிகக் குறுகி அப்பகுதியிலான நிபுணத்துவத்தின் தரம் மிகவுயர்வானதாக வருகின்ற ஒருகாலகட்டத்தில், இக்கூட்டுச் செயற்பாடே மிகவும்முக்கியமான ஓர்அம்சமாகஅமையும் எனவே, உற்பத்திப் பெருக்கத்திற்கான எந்தவொரு தீர்வும், விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மாத்திரமன்றி முகாமையாளர்கள், விற்பனை முகவர்கள் போன்றவர்களதும் ஒன்று சேர்ந்த கூட்டுமுயற்சியிலேயே தங்கி இருக்கும்.

(தொடரும்)

## நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

### செருக்கை ஒழித்த வேலவா!

இராகம்: கானடா தாளம்: ஆதி

பல்லவி

நல்லூர்க் கந்தா ஞானபண்டிதா
நானெனுஞ் செருக்கை ஒழித்த வேலவா
(நல்லூர்)

அநுபல்லவி


சொல்லே ருழவர் துதித்த நாயகா
துன்பம் அகற்றியென்றும் இன்பம் தந்தருள்வாய்
(நல்லூர்)

சரணம்

சங்கிலி மன்னன் ஆண்ட திருநகர்
தங்கும் முருகா தருமம் தழைக்கவே
எங்கும் சுடர் பரப்பி ஈகை வளர்ந்திடவே
பொங்கும் நினதன்பாற் பொலிவு பெறுவோமே
(நல்லூர்)

அநுபூதிச் செல்வன் யோக சுவாமி
குருவாய் வணங்குஞ் செல்லப்ப ஞானி
தேர்முட்டி தன்னிலுந் தெருவீதி முற்றிலும்
உலாவிய சீர்நினைந்து மகிழ்வெய்தி நாம் பணியும்
(நல்லூர்)

- அமரர் ஷண்முக. குமரேசன்



### வறுமைப் பிணிக்கு மருந்து!

வறுமைப்பிணிக்கு மருந்தொன்றிருக்குது
வந்து பாருங்கள் நல்லூரில்
வந்து மருந்தை அருந்திய மாதவர்
வாழ்ந்தார் வாழ்ந்தார் வாழ்ந்தாரே

வீதிக்கு வீதி வெளிச்சமும் அங்கே
வீற்றிருந் தாடவர்கள்
சோதிப் பிரகாச வேலனைக் கொண்டாடித்
[illegible]

- யோகர் சுவாமிகள்

### உதயவாக்கு

எல்லா நல்ல காரியமும், பேச்சும், பணம் பெறாமல் செய்யப்பட வேண்டும் என்பதே நல்லோர் எண்ணம்.
= ரஸ்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போன கடிதத் தலைப்புகள்;

# துப்பு எதுவும் கிடைக்கவில்லை!

கொழும்பு. ஒக. 4

பொலீஸ் தலைமையகத்தியிலுள்ள எழுதுகருவிகள் களஞ்சியத்திலிருந்து பொலீஸ் மா அதிபரின் ஆயிரத்து 90 கடிதத் தலைப்புகள் உட்பட சுமார் 15ஆயிரத்து 70 கடிதத் தலைப்புகள் மற்றும் பொருள்கள் காணாமற் போனது குறித்து விசாரித்து வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு இதுவரை துப்புக்கள் எவையும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் ஆகியன இரகசியப் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டு பரிசீலக்கப்பட்ட போதிலும் தேவைப்படும் தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை எனவும் —

எழுதுகருவிகள் களஞ்சியத்தின் களஞ்சியப் பொறுப்பாளர், லிகிதர் மற்றும்பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஆகியோர் வேறு பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

காணாமற் போன இந்த கடிதத் தலைப்புகளைப் பயன்படுத்தி போலிச் சான்றிதழ்கள் தயாரிக்கப்படக் கூடும் என பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

[இ-10]

### கடித உறைகளுக்குள் விபூதி, நூல்

## பொலீஸ் பரிசோதனைக்கு சமர்ப்பிப்பது அவசியம்

யாழ்ப்பாணம், ஒக. 4

யாழ். குடாநாட்டில் இருந்து கொழும்பு மற்றும் தென்பகுதிகளுக்கு தபால் உறைகளில் வைத்து விபூதி, நூல் மற்றும் சிறிய பொருள்களை அனுப்பி வைப்பது தொடர்பாக பொதுமக்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டுமென யாழ். பிரதம தபாலகம் அறிவுறுத்தியுள்ளது.

பொதுமக்கள் தபால்உறைகளுக்குள் வைத்து விபூதி, நூல் மட்டுமன்றி சந்தனம், குங்குமம் போன்றவற்றையும் அனுப்புவதாகக் கூறப்படுகிறது.

சிலர் தபால் உறைகளுக்குள் ஆயுர்வேத மருந்துகளை வைத்து அனுப்பியதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

எனவே தென்பகுதிகளுக்கு கடிதம் மூலம் விபூதி முதலானவற்றை அனுப்பவிருப்புவோர் கடித உறையை ஒட்டாமல் யாழ். பிரதம பொலீஸ் நிலையத்திற்கு அருகில் தபாலக பரிசோதனைக்கென ஒதுக்கப்பட்ட நிலையத்துக்கு கொண்டு வருதல் வேண்டும் என்றும்—

அங்கு பொலீஸார் இவற்றை பரிசோதனை செய்த பின்னர் கொழும்பு மற்றும் தென்பகுதிகளுக்கு அனுப்பி வைப்பதற்கு தமது அனுமதியை வழங்குவர் என்றும்—

இப்பணிகளுக்கென ஞாயிறு பொது விடுமுறை தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 8 மணி தொடக்கம் 9 மணி வரை விசேட கருமபீடம் ஒன்று பொலீஸ் நிலையத்துக்கு அருகில் இயங்கும் என்றும்—யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-7)

## சீருடை இல்லை

தென்மராட்சி, ஒக. 4

வடபிராந்திய போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த சாரதிகள், நடத்துநர்கள், நேரக் கணிப்பாளர்கள், பரிசோதனைக் குழுவினர் ஆகியோருக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் கடந்த இரண்டு வருடங்களாக சீருடை வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

1990-க்கு முன்னர் வழங்கப்பட்ட சீருடைகளை சில ஊழியர்கள் பாவித்து வருகின்றனர்.

இதேவேளை பஸ் நடாத்துநர்கள் நேரக் கணிப்பாளர்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட வேண்டிய எழுது கருவிகளும் கடந்த இரண்டு வருடங்களாக வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

[இ-117]

## சார்க் மாநாட்டுக்கு ரூ. 6 கோடி செலவு

கொழும்பு, ஒக. 4

கொழும்பில் நடந்து முடிந்த சார்க் நாடுகளின் தலைவர்களின் மாநாட்டுக்கு இலங்கை அரசால் ஆறு கோடி ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சார்க் நாட்டுத் தலைவர்களின் பாவனைக்கு பயன்படுத்திய வாகனங்களுக்கும், பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்ட படையினருக்கான செலவுக்கும், உபகரணங்கள் கொள்வனவுக்குமே இந்தச் செலவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தலைவர்களின் பாவனைக்காக நவீன ரகமான ஆறு பென்ஸ் கார்களும் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(இ- ! ( )

## அதிபர்கள் கூட்டம்

கரவெட்டிக் கல்விக்கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான விசேட கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திரு இருதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலைத் தொகை மதிப்பு, ஊக்குவிப்புக் கொடுப்பனவு முதலிய விடயங்கள் பற்றி இக்கூட்டத்தில் விளக்கமளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

# மக்களின் பொருளாதார வளர்ச்சியில் மக்கள் வங்கிக்கு அதிக அக்கறை

## நடமாடும் சேவை ஆரம்ப விழாவில் தகவல்

நீர்வேலி, ஒக. 4

மக்கள்வங்கி ஏனைய வங்கிகளை விட மக்களின் பொருளாதார வளர்ச்சியில் அக்கறை கொண்டு செயலாற்றி வருகின்றது. ஏனைய வங்கிகளிலும் பார்க்க மக்கள் வங்கி மக்களிடமிருந்து கணிசமான வட்டியைப் பெற்று மக்களுக்குச் சேவையாற்றுவதன் மூலம் மக்களின் பொருளாதார வளத்தைப் பெருக்க உதவுகின்றது,

இவ்வாறு மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் கிங்ஸ்லி இராசநாயகம் தெரிவித்தார். யாழ். மாவட்டத்தில் மக்கள் வங்கியின் நடமாடும் சேவை முதன் முதலாக நீர்வேலி ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையிலேயே பிராந்திய முகாமையாளர் முன்கண்டவாறுசொன்னார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

மக்கள் வங்கியிடம் ஆயிரம் ரூபாவைக் கடனாகப் பெற்ற ஒருவர் தனது தொழில் முயற்சியின் மூலம் இன்று கோடீஸ்வரனாக வளர்ந்துள்ளமையை எனது 35 வருட வங்கிச் சேவையின் போது அவதானித்துள்ளேன்.

மக்கள் வங்கி தனது சேவையினைக் கிராம ரீதியாக மக்களைச் சென்றடையச் செய்து அதன் மூலம் அவர்களின் பொருளாதாரத்தை உயர்த்தி மக்களின் நன்மதிப்பையும் பெற்றுக் கொண்டது. இவை அனைத்திற்கும் கடன் பெறுபவர்களின் ஒழுங்கான செயற்பாடுகளும் மீளளிப்புக்களுமே காரணம் — என்றார்.

நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்து சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் க. ஆனந்தராசா தெரிவித்ததாவது: மக்களின் வளத்தைப் பெருக்கி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடனே சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளை தனது அதிகார எல்லைக்கு உட்பட்ட வலி. கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நீர்வேலிப் ப. நோ. கூ. ச. மண்டபத்தில் யாழ். மாவட்டத்திலேயே முதன் முதலாக நடமாடும் வங்கிச்சேவையை ஆரம்பித்து வைத்துள்ளது.

இச் சேவையின் மூலம் சுய தொழில் முயற்சிக் [illegible] பெறும் ஸ்ரீ முருகன் மாதர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் உரிய முறையில் கடனைப் பயன்படுத்தி, தமது பொருளாதார வளத்தைப் பெருக்கலாம். ஒழுங்கான முறையில் கடனை மீளளிப்புச் செய்வதன் மூலம் இத் திட்டம் வெற்றிபெற மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் — என்றார்.

இந்நிகழ்வில் வலி. கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்க தலைவர் த. கிருஷ்ணராஜா. வலி. கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவு திட்டமிடல் அதிகாரி ஆ. கதிரமலைநாதன், சமூகஜோதி த. பரராசசிங்கம், வலி. கிழக்கு, பிரதேச செயலர் பிரிவு செயற்றிட்ட அலுவலர் கே. மகேஸ்வரன், நீர்வேலி தெற்கு கிராம அலுவலர் சு. சண்முகவடிவேலு ஆகியோருடன் மற்றும் பலர் உரையாடினர்.

இந் நிகழ்வில் நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்க உறுப்பினர்கள் 12 பேருக்கும் வலி. கிழக்கு தென் பகுதி ப. நோ. கூ. சங்க ஊழியர்கள் மூவருக்கும் [illegible] சிக்கடன் தலா 10 ஆயிரம்ரூபா வழங்கப்பட்டது.

(ஐ-110)

# செய்திக் கொத்து

## கப்பல் இல்லை; மாணவர் பாதிப்பு

சுன்னாகம், ஒக. 4

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் இருந்து வந்து ஆசிரிய கலாசாலைகளில் கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்கள் இந்த விடுமுறைக்கு தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னுரிமை அடிப்படையில் கப்பல் பயணத்துக்கான அனுமதியைக் கோரி இவர்கள் விண்ணப்பித்த போதும், கப்பல் தாமதம் காரணமாக பயணத்தை மேற்கொள்வதில் சிக்கல் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் ஒரு மாத காலத்திற்குள் தத்தம் இடங்களிலிருந்து திரும்ப வேண்டியிருப்பதாகவும் —

சீரான கப்பல் வசதி இல்லாத பட்சத்தில் அது சாத்தியமானதல்ல என்றும் —தெரிவிக்கப்பட்டது.

(இ-27-9)

## நூலக புனரமைப்பு

நெடுந்தீவு, ஒக. 4

வேலணை பொது நூலகப்புனரமைப்புப் பணிகள் அடுத்து வரும் மூன்று மாதங்களுக்குள் முடிவடையும் எனத் தெரிகிறது. அதற்கமைய புனரமைப்பு வேலைகளைத் துரிதமாக மேற்கொள்ள உதவி அரசாங்க அதிபர் பணிமனையும், வேலணை பிரதேச சபையும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

இந்த நூலகத்தின் புனரமைப்புப் பணிகளுக்கென அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், 5 லட்சம் ரூபாவையும் பிரதேச சபை 3 லட்சம் ரூபாவையும் வழங்கியுள்ளன.

(ஐ-111)

## திருத்தப்படாத வீதியால் பாதிப்பு

சுன்னாகம், ஒக. 4

சுன்னாகம் பஸ் நிலையப் பகுதியில் நீண்ட நாள்களாகக் கற்கள் குவிக்கப்பட்டிருப்பதால், அவை சிதறுண்டு போக்குவரத்துக்குக் குந்தகம் விளைவிப்பதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

பஸ்கள், மினிபஸ்கள் வந்து செல்லும் இப்பாதை வழியாகவே கந்தரோடை, மாகியப்பிட்டி, சங்கானைப் பகுதி மக்கள் சுன்னாகம் சந்தைக்கு வந்து செல்ல வேண்டியுள்ளது.

இதேவேளை— சுன்னாகம் சந்தையைச் சுற்றியுள்ள வீதியும் பலத்த சேதமடைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-27-9)

## ரூ. 5 ஆயிரம் கொடுப்பனவு

நெடுந்தீவு, ஒக. 4

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக் குடியமர்ந்த சுமார் அறுநூறு குடும்பங்களுக்கு நாளை புதன் கிழமை மீளக் குடியமர்வுக்கான கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இது தவிர வீடிழப்பு நஷ்டஈட்டுக்கான கொடுப்பனவு ரூ. 25 ஆயிரம் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் நான்கு பேர்கள் வீதம் 30 கிராம அலுவலர் பிரிவுகளில் வழங்குவதற்கான அனுமதியும் கிடைத்துள்ளது.

(ஐ-111)

## பிரிவுபசாரம்

தென்மராட்சி, ஒக. 4

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றி இளைப்பாறிய மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற எட்டு ஊழியர்கள், உத்தியோகத்தர்களுக்கான பிரிவுபசார விழா அண்மையில் வைத்தியசாலை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் வைத்தியசாலை மண்டபத்தில் வைத்தியசாலை பல் சிகிச்சை நிபுணரும், பதில் மாவட்ட வைத்திய அதிகாரியுமான டாக்டர் வீ. ஆர். டேவிட் தலைமையில் நடைபெற்றது.

(இ-117-9)

## பயன் தரு மரங்கள் அழிப்பு

சண்டிலிப்பாய், ஒக. 4

பண்டத்தரிப்பு - கீரிமலை வீதியிலும் ஏனைய சில வீதிகளிலும் இருபக்கங்களிலுமுள்ள மரங்கள் தறிக்கப்பட்டு வருகின்றன. இச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி சிலர் பயன் தரும் பாரிய மரங்களையும் அடியோடு தறித்துக் கொண்டு போவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆள்கள் இல்லாத வீடுகளிலுள்ள பயன் தரு மரங்களையும் இவர்கள் தறித்துக் கொண்டு போய் விறகுக்கு விற்க முற்படுவதாக அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

(இ-135-9)

## சட்டப்பட்டம் ஒருவருக்கு மட்டும்

யாழ். திறந்த பல்கலைக்கழக சட்டமாணிப் பரீட்சையில் தோற்றிய 91 பேரில் ஒருவர் மட்டுமே ''சட்டப் பட்டம்'' கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை இப்பரீட்சைக்கு தோற்ற 450 இற்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்து பதிவு செய்த போதும் 95 பேருக்கே விண்ணப்ப படிவங்கள் கிடைக்கப்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-185-9)

## ஏ. ஆர். வி. மருந்து வந்தது

நெல்லியடி, ஒக. 4

மந்திகை மருத்துவமனைக்கு யாழ். பிராந்தியப் பிரதிச் சுகாதாரப் பணிப்பாளரினால் ஒரு தொகுதி ஏ. ஆர். வி. ஊசி மருந்து கடந்த வியாழக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ-109)

## மருதங்கேணியில் பிரஜைகள் குழு

செம்பியன்பற்று ஒக. 4

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் பிரஜைகள் குழு அமைக்கப்பட்டுள்ளதாக மருதங்கேணி உதவி அரச அதிபர் வி. பி. வேலாயுதபிள்ளை தெரிவித்துள்ளார்.

(இ-36-9)

## மின் விளக்கு அமைக்கக்கோரிக்கை

கிராமக் கோடு — மருதங்கேணி வீதியில் அமைந்துள்ள மின்கம்பங்களுக்கு இடையிடையே, வீதி விளக்கு அமைத்துத்தருமாறு, தென் புலோலி ஸ்ரீ முதலி அம்பாள் ஆலய தரும பரிபாலன சபை இலங்கை மின்சார சபையின் வடபிராந்தியபொது முகாமையாளருக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

(இ-109-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டமனாறு பாலம் புனரமைப்பு பணி ஆரம்பம்

வடமராட்சி, ஓக. 4

தொண்டமனாறு பாலம் புனரமைப்புப் பணி ஆரம்பமாகியுள்ளது.

இப்பாலம் கடந்த பதினொரு ஆண்டுகளுக்கு முன்னர் குடாநாட்டில் நிலவிய யுத்த நிலைமை காரணமாகச் சேதமடைந்திருந்தது.

1987 இல் வடமராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பரேஷன் லிபரேஷன் நடவடிக்கையின் போது தற்காலிகமாக இந்தப் பாலம் அமைக்கப்பட்ட போதிலும் பின்னர் 1990 இல் இப்பாலம் உடைத்துச் சேதமாக்கப்பட்டது.

இப்பாலம் உடைக்கப்பட்ட காலம் முதல் இப்பாலத்தினூடாக நடைபெற்று வந்த கரையோர போக்குவரத்துக்கள் யாவும் துண்டிக்கப்பட்டன.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள புனரமைப்புப் பணி முடிவடைந்ததும் யாழ்ப்பாணத்துக்கும் பருத்தித்துறைக்கும் இடையிலான கரையோரப் போக்குவரத்து ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை —

புதியபாலம் பூர்த்தியடைந்ததும் யாழ்ப்பாணம் — பருத்தித்துறை பிரதான பாலமான வல்லைப்பாலப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. வல்லைப்பால புனரமைப்புப்பணி ஆரம்பிக்கப்பட்டதும் பருத்தித்துறை— யாழ்ப்பாணம் போக்குவரத்து தற்காலிகமாக தொண்டமானாறு பாலம் ஊடாக நடைபெறும் எனத் தெரியவருகிறது. (ஐ-173)

## இருபாலை தெற்கில் குளம் புனரமைப்புப்பணி

யாழ்ப்பாணம், ஓக. 4

இருபாலை தெற்கு கும்பாவயல் குளம் புனரமைப்பு வேலைகள் நேற்று சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இருபாலை தெற்கு விவசாயிகள் சம்மேளனத் தலைவர் சீரானன் இராமசாமி தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் கமத்தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ். சுந்தரேசன், இருபாலை தெற்கு கிராம அலுவலர் என். நாகேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

குளப் புனரமைப்பு பணியில் ஈடுபடவுள்ள தொழிலாளர்களுக்கு உலக உணவு நிறுவனத்தின் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இக் குளப் புனரமைப்பு பணியைத் தொடர்ந்து இருபாலை தெற்கில் சிங்கராயர் வயல் வாய்க்கால் புனரமைப்பு ஆரம்பிக்கப்பட உள்ளது.

(ஐ)


### யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

சகல வர்த்தகர்களுக்குமான

**அன்பான வேண்டுகோள்**

### ஸ்ரீ பாலகதிர்காம ஆடிவேல் விழா

ஸ்ரீ பாலகதிர்காம ஆடிவேல் இரத பவனி 10-08-98 திங்கட்கிழமை பி. ப. 1-00 மணிக்கு வீரமாகாளி அம்மன் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி யாழ் நகர் அனைத்து வீதிகளூடாக மாலை 5-30 மணிக்கு வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலடியைச் சென்றடையும். அதன்பின் 11-08-98 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு காங்கேசன்துறை வீதி வழியாக பகல் 12 – 00 மணிக்கு வண்ணை நாச்சிமார் அம்மன் ஆலயத்தைச் சென்றடையும்.

எனவே சகல வர்த்தகப் பெருமக்களும் வாழை, தோரணங்களால் யாழ். நகரை அலங்கரித்து முருகப் பெருமானை வரவேற்று, அவரின் இஷ்டசித்திகளைப்பெற்று இந்த இந்துக் கலாசார வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

— யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

(சி-4462)



### மனமார வாழ்த்துகிறேன்

விலை மதிப்பீட்டுத் திணைக்கள உத்தியோகத்தராக கடமை புரியும்

**சிவசுப்பிரமணியம் சிவரத்தினம்**

அவர்கள் அண்மையில் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றது குறித்து நாங்கள் மகிழ்ச்சி அடைவதுடன் அவரை இதயபூர்வமாக வாழ்த்துகின்றோம்.

க. உதயகுமார் (மவா)
அத்தான் கடை,
93, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(58094)



### கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக இரண்டாம் வருட மாணவி
(தமிழ் சிறப்புக் கலை)
கவிதா அவர்களின் தந்தையார்

**பொ. நித்தியானந்தன்**

அவர்களின் மறைவை ஒட்டி ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

2 ஆம் வருடம் 'B' பிரிவு மாணவர்கள்
தமிழ் சிறப்புக்கலை
யாழ். பல்கலைக்கழகம்

(58106)


## தெய்வீக இசையரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 4

நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 5.30 மணி முதல் 7.00 மணி வரை ஒழுங்கு செய்துள்ள தெய்வீக இசையரங்கில் இன்று செவ்வாய்க்கிழமை எம். ஸ்ரீரங்கநாதனின் இசைக கச்சேரி நடைபெறவுள்ளது. துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் திருமுறை ஓதலுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். (ஐ-ரீ)

## வீதி திருத்த ரூ. 3 லட்சம்

அச்சுவேலி, ஓக. 4

பத்தமேனிப் பகுதியில் மூன்று வீதிகள் 3 இலட்சத்து 6 ஆயிரம் ரூபா செலவில் திருத்தி அமைக்கப்படவுள்ளன.

பத்தமேனி பலாலி வீதி விபசி வித்தியாலய வீதி உள்ளிட்ட இந்த வீதிகளைத் திருத்தி அமைப்பதற்கான நிதியை அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் வழங்கியது.

## சமய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஓக. 4

சூராவத்தை முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் சப்பறத் திருவிழா நாளை புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறும்.

வியாழக்கிழமை காலை 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறும். (இ-4)

★ ★ ★

யாழ். மரியன்னை பேராலயப் பெருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5.30 மணிக்கு நடைபெறும். நற்கருணை விழா இம்மாதம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5. 00 மணிக்கும், திருவிழா வழிபாடுகள் இம் மாதம் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலையும் நடைபெறும். அன்றைய தினம் முதலாம் திருப்பலி காலை 7.15 மணிக்கு நடைபெறும்.

மரியன்னையின் திருச் சுருபப் பவனி, திருவிழா தினமான 15ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு நடைபெறும். (இ-51-9)

★ ★ ★

அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா எதிர்வரும் வியாழக்கிழமையும் தீர்த்தத் திருவிழா மறுநாள் வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளன. (ஐ-11)

★ ★ ★

கொக்குவில் மேற்கு சித்தி விநாயகர் ஆலய வருடாந்த இரதோற்சவம் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. தீர்த்த உற்சவம் மறுநாள் வெள்ளிக்கிழமையன்று நடைபெறும். (ஐ-135)

## தபாற்கட்டைச் சந்தி மதகு அகலமாக்கிப் புனரமைப்பு

அரியாலை, ஓக. 4

அரியாலை தபாற்கட்டை சந்திக்கு அருகாமையில் புனரமைக்கப்படும் மதகை அகலமாக்கிக் கட்ட வேண்டும் என்று இப்பகுதி மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக அதனை அகலமாக்கும் பணிகள் தற்போது இடம் பெற்று வருகின்றன.

இம்மதகு ஏற்கனவே நாற்பது அடி அகலத்தை கொண்டிருந்தது எனினும் இருபத்தைந்து அடி அகலத்தை கொண்டதாகப் புனரமைக்கப்பட்ட சமயம் இம்மதகுக்கு அருகில் செல்லும் செம்மணி வீதிக்கும் பிரதான கண்டி வீதிக்கும் போக்குவரத்துக்கு பெரும் இடைஞ்சல் ஏற்படும் ஆபத்துக்கள் இடம் பெறலாம் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இதனை அடுத்து இப்பகுதி மக்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினருடன் தொடர்பு கொண்டு முன்னர் இருந்தது போன்று மதகின் அகலத்தைக் கூட்டி புனரமைப்பு செய்ய வேண்டும் என்று கோரியிருந்தனர். அதற்கு அமைவாகவே மதகு இப்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இதேசமயம் நெடுங்குளம் சந்திக்கு அருகில் உள்ள மதகைப் புனரமைக்கும் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

மாம்பழம் சந்திக்கும், புங்கங்குளம் சந்திக்கும் அண்மையில் உள்ள மதகுகளைப் புனரமைக்கும் வேலைகளும் நடைபெறுவதை அவதானிக்க முடிந்தது. (அ-17)

## போயா தின ஆன்மீக நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாதாந்த போயா தின ஆன்மிக நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

காலை 9 மணிக்கு கொடியேற்றலுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். காயத்திரி ஜெபம், இலட்சார்ச்சனை, தியானம், பண்ணிசை, சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம்பெறும். (ஐ)

## மெய்வன்மைப் போட்டி

பளை வை. எம். சீ. ஏ. நிறுவன பாலர் பாடசாலை சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று பளை பாலர் பூங்கா மைதானத்தில் பளை பிரதேச சபைச் செயலாளர் கு. ந. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

இப்போட்டிக்கு முதன்மை விருந்தினராகப் பளைக் கோட்டக் கல்வி அலுவலர் இ. கயிலாயபிள்ளையும், சிறப்பு விருந்தினராக பளை பிரதேச செயலர் சு. புத்திசிகாமணியும் கௌரவ விருந்தினராக வை. எம். சீ. ஏ. நிறுவனத்தைச் சேர்ந்த ஜீவானந்தமும் கலந்து கொள்வர். (ஐ-117)

## விளையாட்டு உபகரணம்

கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களை வழங்கியுள்ளது.

கிரிக்கெட், கரப்பந்தாட்டம் பாட்மின்டன் ஆகிய விளையாட்டுக்களுக்கான உபகரணங்களே வழங்கப்பட்டவை ஆகும்.


### கண்ணீர் அஞ்சலி

3 ஆம் வருட விஞ்ஞான பீட மாணவரான
திரு. சேவியர்தாசன் அவர்களின்
அன்புத் தந்தை

**அந்தோனிப்பிள்ளை இராயப்பு**

அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்,
3 ஆம் வருடம் விஞ்ஞானபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(58108)



### நன்றி கூறுகிறோம்

26 – 7 - 98 அதிகாலையில் இராமேஸ்வரம் கடலில் நடந்த படகு விபத்தில் சிக்கி இறந்த தெணியம்பை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த

திருமதி
**தங்கவேல் பரமேஸ்வரி**
செல்வி
**தங்கவேல் தங்கேஸ்வரி**

ஆகியோரின் சடலங்களைத் தேடும் பணியில் நாம் ஈடுபட்டபோது எமக்கு சகல வழிகளிலும் உதவி அளித்த ஊர்காவற்றுறையைச்சேர்ந்த உதவி அரசாங்க அதிபர் திரு. ஜே. எக்ஸ். செல்வநாயகம் அவர்களுக்கும் E.P.D.P. அலுவலகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் திரு. ஞானம், அஜந்தன் ஆகியோருக்கும். பொலீஸ் உத்தியோகத்தர்கள், நெடுந்தீவு M.P.C.S பொதுமுகாமையாளர், E. P. D. P. பொறுப்பாளர் மோகன், பொலீஸ் அலுவலர்கள், கிராமசேவையாளர்கள், துறைமுகத்தடியைச் சேர்ந்த படகு உரிமையாளர் திரு. ஆ. கந்தையா அவர்கள், புங்குடுதீவு கடற்படையினர், கிராமசேவையாளர்களான திரு. தனபாலசிங்கம், திரு. விநாயகமூர்த்தி, திரு. சந்திரன் ஆகியோருக்கும் அம்பாள் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் திரு. சிறிகாந்தன் குடும்பத்தினர், தீவுப்பகுதி மரண விசாரணை அதிகாரி திரு. K. M. இம்மானுவேல் ஆகிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கு. நடராசா தம்பதியினர்
158, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(58096)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியால் வந்தோரின் படகுகள் குருநகரில்

யாழ்ப்பாணம், ஒக. 4

வன்னியிலிருந்து திரும்பிய வடமராட்சியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களில் 300க்கும் அதிகமான படகுகள் குருநகரில் வைக்கப்பட்டுள்ளன. நூறு படகுகள் வரை சேதமடைந்த நிலையில் கடலில் கைவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி மற்றும் தீவுப் பகுதிகளிலும் பெரும் எண்ணிக்கையான படகுகள் இவ்வாறு கவிழ்த்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்ணாடியிழைப் படகுகளை கடற்றொழிலுக்குப் பயன்படுத்துவது தடை செய்யப் பட்டதையடுத்தே இந்தப் படகுகள் பாவனையின்றி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்)

ணப்பித்தும் பாதுகாப்பு அமைச்சு பின்னடித்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அனுமதி தொடர்பாக ஐ. நா. அதிகாரிகள் குழு கடந்த 31 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சுடன் நேரடியாகப் பேச்சு நடத்திய போதும் அதற்கான அனுமதி மறுக்கப்பட்டு விட்டது.

இவ்விடயம் தொடர்பாக கொழும்பிலுள்ள ஐ. நா. அதிகாரிகளுடன் பேச்சு நடத்தும் பொருட்டு ஐ. நா. அபிவிருத்தி திட்ட யாழ். வதிவிடப் பிரதி நிதி ஹரி ஹெல்சர் கொழும்பு சென்றுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்காததை அடுத்து உள்ளூரில் கண்ணிகளை அகற்றுவது தொடர்பாகப் பயிற்சி வழங்குவதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட 50 பேருக்கான பயிற்சிகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்காக ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தினால் பணிக்கு அழைக்கப்பட்ட வெடிப் பொருள் அகற்றும் நிபுணர் டேவிட் டெய்லர் தமது தாய் நாட்டிற்கு திரும்பிச் சென்று விட்டார்.

அரசின் அனுமதி கிடைத்தால் மட்டும் அவர் இம்மாத இறுதியில் யாழ். திரும்புவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

வீடுகளிலும் மற்றும் பொது இடங்களிலும் புதையுண்டு போயுள்ள மிதிவெடிகள் மற்றும் வெடிபொருள்களை செயலிழக்கச் செய்யுமாறு யாழ்ப்பாணத்திலுள்ள ஐ. நா. அபிவிருத்தித் திட்ட செயலகத்திடம் பொதுமக்கள் பலர் விண்ணப்பித்து வருகின்றனர்.

மிதிவெடிகள் அகற்றும் விடயத்தில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தொடர்ந்து மறுக்கப்பட்டு வருமானால் மிதிவெடி அகற்றும் பணியிலிருந்து ஐ. நா. அபிவிருத்தி திட்டம் வாபஸ் பெறும் நிலைக்குத் தள்ளப்படலாம் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஐ-௭)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்)

பிக்கை இழந்து விட்டது. மூன்றாம் தரப்பு ஒன்றின் மத்தியஸ்தம் இன்றி இப்பிரச்சினையைத் தீர்க்கவே முடியாது. பாதையைத் திறந்தால் புலிகள் பேச வருவார்கள் எனக் கூறி காலத்தைக் கடத்த முடியாது. எனவே அரசு உடனடியாக யுத்தத்தை நிறுத்தி பேச்சு நடத்த முன்வரவேண்டும்— என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-1)

விசேட விடுமுறை வகுப்புக்கள்

A/L 99 PURE/APPLIED

(1) தடுக்கும் ஊடகங்களின் இயக்கம் (6 வகுப்புக்கள்)
(2) வேலை, வலு, சக்தி (6 வகுப்புக்கள்)
(3) திணிவு மாறும் இயக்கம் (3 வகுப்புக்கள்)
(4) வகையீட்டு சமன்பாடு (2 வகுப்புக்கள்)

நேரம்:- புதன், வியாழன் 11.00 -- 1.00
வெள்ளி 8.30 -- 12.30

ஆரம்பம்:- 05-08-98 புதன் (11.00 A. M)

A. பத்மநாதன்
நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில். (58068)

கண்ணீர் அஞ்சலி

அமரர் பொன்னுத்துரை நித்தியானந்தன்

(பிரதம எழுதுநர், பிரதேச சபை, மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலக பிரதம எழுதுநர் பொ. நித்தியானந்தன் அவர்கள் 03. 08. 98 அன்று மறைந்தமை எமது பிரதேச சபைக்கு ஓர் ஈடு செய்ய முடியாத பேரிழப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவரது மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர், செயலாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்
வலிகாமம் தென்மேற்கு
பிரதேச சபை,
மானிப்பாய்.
(58095)

# விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக. 4

டொனால்ட் கணேசகுமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 50 ஓவர் கிரிக்கெட் போட்டியில் இன்று காலை 9. 30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் பற்றீசியன் அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் அணி மோதும்.

லேற்றஸ் பான்சி ஹவுஸ், ராதை அழகுச்சோலை ஸ்தாபனத்தாரின் ஆதரவில் இப்போட்டி நடைபெறும். (ஐ)

# கைதானோர் விடுதலை

நெல்லியடி ஒக. 4

வடமராட்சிப் பகுதியில் கடந்த வெள்ளியன்று கைது செய்யப்பட்ட மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 13பேரும் அன்று மாலையே விடுவிக்கப் பட்டனர் (ஐ-109)

# வன்னியில் கடும் மழை

வவுனியா, ஒக. 4

வன்னியில் ஒட்டுசுட்டான் பகுதியில் கடந்த இருதினங்களாகத் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும் மழையினால் பெருமளவிலான பயிர் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கடும் மழையினால் நெற்காணிகள் வெள்ளத்தால் மூடப்பட்டு அழிந்துள்ளதாகவும் குளங்கள், வாய்க்கால்கள் நிரம்பி வழிவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-9)

## மாங்குளத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

தலைமையகம் நேற்று மாலை அறிவித்தது.

இம்மோதலின்போது ரி-56 ரகத் துப்பாக்கிகள் - 18, எல். எம். ஜி. மற்றும் பி. எம். ஜி. ரகங்களைச் சேர்ந்த ஐந்து ஆயுதங்கள் ஆகியவற்றைப் படையினர் கைப்பற்றியதாகவும் அந்த அறிவிப்பு மேலும் தெரிவித்தது.

நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் மூன்றுமுறிப்புப் பகுதியில் உள்ள படைக் காவலரண்கள் மீது தாங்கள் நடத்திய தாக்குதல் நேற்றுக் காலை 10 மணி வரை நீடித்ததாகத் தெரிவித்த புலிகள் தமது தரப்பில் 14 பேர் உயிரிழந்ததை ஒப்புக் கொண்டனர்.

இச்சமர் குறித்து புலிகள் வெளியிட்ட மேலதிக தகவல்கள் செய்தித் தணிக்கை காரணமாகத் தவிர்க்கப்பட்டுள்ளன. (உ-9)

## கைதாவோர்...

(முதலாம் பக்கத் தொடர்)

தெரிந்ததே.

கைதாவோர் குறித்து முப்படையினருடனும் தொடர்பு கொண்டு செயல்படவென மூன்று சிரேஷ்ட அதிகாரிகள் குழுவுக்கு நியமிக்கப்பட்டனர்.

பொலீஸாருடன்தொடர்பு கொண்டு செயற்படுவதற்காக சிரேஷ்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர்களுள் ஒருவரான காமினி குணவர்த்தனா நியமிக்கப்பட்டார்.

குழுவுக்குஇதுவரை கிடைக்கப்பெற்ற 51 முறைப்பாடுகளில் 25 முறைப்பாடுகள் கொழும்பில் வசிப்பவர்களிடமிருந்து அனுப்பி வைக்கப் பட்டவையாகும். ஏனையவை திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார் பகுதிகளில் இருந்து கிடைத்தவையாகும். (உ-9)

# படகு விபத்தில் உயிர் தப்பியோர்



கடந்த 25 ஆம் திகதி இராமேஸ்வரம் கடற்பகுதியில் இடம் பெற்ற படகு விபத்தில் உயிர்தப்பி நீந்தி இந்தியக் கரை சேர்ந்தவர்களை மேலே உள்ள படத்தில் காணலாம்

இந்த விபத்தில் உயிர் தப்பிய எட்டுப்பேரின் பெயர்கள் ஏற்கனவே வெளியாகி இருப்பது தெரிந்ததே. (ஐ)

# லயன்ஸ் கழகத்துக்கு தையல் இயந்திரங்கள்

யாழ்ப்பாணம், ஒக. 4

சுன்னாகம் லயன்ஸ் கழகத்திற்கு சிங்கர் நிறுவனத்தினால் 5 தையல் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

513 ஆவது படையணியின் தளபதி கேட்டுக் கொண்டதற்கிணங்க சிங்கர் நிறுவனம் இந்த தையல் இயந்திரங்களை வழங்க முன்வந்துள்ளது.

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினால் தையல் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த பயிற்சிநிலையத்தின் செயற்பாட்டுக்காகவே மேற்படி தையல் இயந்திரங்கள் வழங்கப்படுவதுடன் சலுசலா நிறுவனம் 170 மீற்றர் துணியையும் வழங்கவுள்ளது.

தொழிற்பயிற்சி நிலைய ஆரம்ப விழா எதிர்வரும் 7ஆம்திகதி காலை 10மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். இவ் வைபவத்தில் வைத்து 5 தையல் இயந்திரங்களும் லயன்ஸ் கழகத்திடம் வழங்கப்படும்.

ஆறுமாத காலம் நடைபெறும் இந்த தையல் பயிற்சிக்கு 15 பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பயிற்சி நிறைவில் பயிற்சி பெற்றவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா வரை இலங்கை வங்கி, மக்கள் வங்கி மூலம் கடனுதவிகள் பெற்றுக் கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்)

வேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் சமீபத்தில் விடுத்த கோரிக்கைகளை ஜனாதிபதி நிராகரித்திருப்பது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

17 வருடகால ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலும் சரி, கடந்த 4 வருடகால பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியிலும் சரி, இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை. பிரச்சினைக்கு தீர்வு காண எடுக்கப்பட்ட எல்லா முயற்சிகளும் முடங்கிப் போயின. தற்போதைய அரசின் தீர்வுத் திட்டம் நிறைவேற்ற முடியாத நிலையில் உள்ளது. இப் பிரச்சினைக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என்பதை விடுதலைப் புலிகளும், ஏனைய தமிழ்க் கட்சிகளும் ஏற்றுக் கொண்டுள்ளன.

தமிழர்களின் பிரச்சினையை உள்நாட்டுப் பிரச்சினை என்று கூறிக் கொள்வதன் மூலம் இலங்கையும் இந்தியாவும் ஒரு தரப்பு மற்றைய தரப்பை ஏமாற்றிக் கொள்வதுடன் தமிழ் மக்களையும் ஏமாற்றுகின்றன.

குடாநாட்டுக்கான தரை வழிப்பாதையைத் திறப்பதன் மூலம் புலிகளைக் கட்டுப்படுத்த முடிந்தாலும் அவர்களை முற்றாக ஒழிக்க முடியாது. பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வரை எந்தவொரு கெரிலலா அமைப்பையும் ஒழித்துக் கட்ட முடியாது.

உலகில் ஓர் அரசியல் கட்சியுடனோ அல்லது இயக்கத்துடனோ முன் நிபந்தனைகளை விதித்து நடத்திய பேச்சுவார்த்தைகள் திருப்தி அளித்ததாகத் தெரியவில்லை.

விடுதலைப் புலிகள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை ஏற்று பேச்சு நடத்த தயாராக உள்ளனர். முன் நிபந்தனைகளுடன் தான் அவர்கள் பேச்சு நடத்த வருவார்கள் என நாம் எதிர்பார்க்கவில்லை.

எனவே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பான தமது கருத்தை ஜனாதிபதி மறுபரிசீலனை செய்யவேண்டும் — என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-1)

விண்ணப்பப் படிவங்கள் விற்பனைக்கு

மொறட்டுவ பல்கலைக்கழக
தேசிய டிப்ளோமா கற்கைநெறி
விண்ணப்பப் படிவங்கள் விற்பனைக்குஉண்டு.

அருண் ஸ்போட்ஸ் ஸ்பொட்
ARUN SPORTS SPOT
347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி/4464)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04-08-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org